விலை சதம் 25. தொலைபேசி 23411

# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2002, ஆனி 1உ (15-6-71) செவ்வாய் ற.ஆதிர் பிறை 21 புத்தகம் 25 இதழ் 30


## தமிழ்ப் பயிற்சி மொழி கோரிக்கையை

# தூக்கியெறிந்தது அரசியல் நிர்ணய சபை

தமிழ்பிள்ளைகளுக்குதமிழே பயிற்சி மொழியாக இருக்கவேண்டுமெனவும் இந்த உரிமைபுதிய அரசியலமைப்பில் இடம்பெற வேண்டுமென்றும்இந்நாட்டுத் தமிழ் மக்களின்சார்பில் இலங்கைத்தமிழரசுக் கட்சி அரசியலமைப்பு அடிப்படைத் தீர்மானம் ஐந்துக்கு கொண்டு வந்த அதிமுக்கிய திருத்தம், சிங்களப் பெரும் பான்மையினரைக் கொண்ட அரசியல் நிர்ணய சபையினுல் இவ்வாரம் தூக்கியெறியப் பட்டுவிட்டது

வல்வையில் நடைபெற்ற அனைத்துத் தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை மாநாட்டில் விடுக்கப்பட்ட

(2-ம் பக்கம் பார்க்க)

# 'இரண்டாயிரம் ஆண்டுகள் சென்றுலும்

# கடைசி தமிழன் உள்ளவரை

# உரிமைக்கு போராடுவோம்!'

## அ. நி. சபையில் நேமிநாதன் முழக்கம்'

'இரண்டாயிரம் ஆண்டுகள் சென்றுலும் இந்நாட்டில் கடைசித் தமிழன் இருக்கும் வரை எமது இனத்தின் மொழியுரிமைக்காகப் போராடியே தீருவோம்!'

—இவ்வாறு அரசியல் நிர்ணய சபையில் கர்ச்சித்தார் திருமலை பா. உ. திரு. பா. நேமிநாதன் அவர்கள்!

அவர் மேலும் பேசுகையில் அ.

(11-ம் பக்கம் பார்க்க)

# தனி ஆட்சி நடத்தியவர்கள் ஈழத் தமிழினத்தார்!

## அ. நி. சபையில் ஜெயக்கொடி முழக்கம்!

உடுப்பிட்டி எம். பி: திரு: ஜெயக்கொடி அரசியல் நிர்ணய சபையில் அடிப்படைத் தீர்மானம் ஐந்தின் மீதான விவாதத்தின்போது பேசுகையில் கூறியதாவது—

'1948ம் ஆண்டு இலங்கை நாட்டிற்கு கிடைத்த சுதந்திரம் முழுமை பெற்றதாக இல்லை என்றதனுல்தான் நாம் அரசியல் நிர்ணய சபையை அமைத்து இந்த சுதந்திரத்தை முழுமைப் படுத்த விரும்புகிறேம்.

சாதி, சமய வேறுபாடின்றி சமத்துவ சமதர்ம உரிமை அனைவருக்கும் வழங்கப்படவேண்டும். மூழுமை பெற்ற சுதந்திரம் இலங்கையிலுள்ள அனைவருக்கும் கிடைக்கட்டும்.

தமிழ் பேசும் மக்களின் உள்ளங்களில் சந்தேகங்கள் எழுந்துள்ளன. வருங்காலத்

(2-ம் பக்கம் பார்க்க)



## வெளிநாடுகளில் 'பீப்பிள்ஸ் வில்' ஏட்டுக்கு பெருத்த வரவேற்பு !

ஆங்கிலத்தில் வெளியாகும் இலங்கை வாழ் தமிழ் மக்களின் உரிமைக்குரலான 'பீப்பிள்ஸ் வில்' ஏட்டுக்கு வெளிநாடுகளில் பெருத்த வரவேற்பு காணப்படுகிறது. இந்தியா இங்கிலாந்து, மலேசியா போன்ற நாடுகளில் உள்ள அரசியல் தலைவர்களையும் இலங்கைத் தமிழர் பிரச்சினைகளில் ஆர்வமுடைய ஏனையோரையும் 'பீப்பிள்ஸ் வில்' பெருமளவு கவர்ந்துவிட்டதாம்.

மூதறிஞர் ராஜாஜி, அமைச்சர் சி. சுப்பிரமணியம், சி. பா. ஆதித்தனுர், தி. மு. க. தலைவர்கள் மற்றும் அரசியலாளர்கள் 'பீப்பிள்ஸ் வில்' ஏட்டின் மூலம் இலங்கைத் தமிழர் பிரச்சினைகளை அறிந்துகொள்வதில் ஆர்வம் காட்டி வருகிறுர்கள் என்று அறியப்படுகிறது.

அண்மையில் தமிழக சட்டசபையில் 'பீப்பிள்ஸ் வில்' ஏட்டில் வெளியாகியிருந்த கட்டுரையொன்றை தமிழக முதல்வர் கலைஞர் கருணநிதி வாசித்துக்காட்டியது தெரிந்ததே.

## அடுத்த இதழில்:

அரசியல் நிர்ணய சபையில், சி. கதிரவேற்பிள்ளை, பா. நேமிநாதன், க. துரைரத்தினம், அ. தங்கத்துரை, வி. என். நவரத்தினம், ஆகியோர் நிகழ்த்திய உரைகள் சுதந்திரனில் இடம் பெறும். —ஆர்.

## உள்ளே


அரசியல் மடல் -பக்கம் 3
ஒத்துழைப்பாளர்களுக்கு ஓர் சவால் —பக்கம் 4
கிருபானந்தவாரியார் கட்டுரை —பக்கம் 4
குயுக்தியார் —பக்கம் 5
கருணநிதியின் கலையணையின்கீழ் கருநாகம் —பக்கம் 6
'பொதுவாழ்வு' பற்றி அமரர் அண்ணு —பக்கம் 7
முரசொலி மாறனின் வங்கநாட்டு விடுதலை வாலாய —பக்கம் 7
மலையகத்திலே-பக்கம் 8
சீக்கள் விரலை வைத்தால் (புதிய தொடர்கதை)-பக்கம் 9
'நீரிழிவு' மாறுவதற்கு ஓர் இயற்கை வைத்தியம் —பக்கம் 10


# 'தினபதி' கும்பலின் கயிறுதிரிப்புக்கு மக்கள் திலகம் எம். ஜி. ஆர். பதிலடி!

## கலைஞருடன் கருத்து வேறுபாடு இல்லையென அறிவிப்பு!

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்களுக்கும், தமிழக முதல்வர் கலைஞர் கருணநிதிக்கும் மது விலக்குப் பிரச்சினையில் மோதல் ஏற்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக தி. மு. க.விலிருந்து எம். ஜி. ஆர் வெளியேறலாமென்றும் தினபதியாரின் வாராந்த ஏடான சிந்தாமணி அண்மையில் முன் பக்கத்தில் சிவப்பு மையில் கொட்டை எழுத்துக்களில் கயிறு திரிப்பு செய்தியொன்றை வெளியிட்டிருந்ததல்லவா? அந்தச் செய்தியை முற்றுக மறுத்து தினபதி கும்பலுக்கு சரியான சாட்டையடி கொடுத்துள்ளனர் மக்கள் திலகம் எம். ஜி. ஆரும், தமிழக முதல்வர் கலைஞர் மு.க.வும்.

சென்னையில் நடைபெற்ற எம். ஜி. ஆர் நடித்த 'ரிக்ஷாக்காரன்' முதல் நாள் படவிழாவில் எம். ஜி. ஆர் பேசுகையில் பின் கண்டவாறு கூறினுர்:—

(2-ம் பக்கம் பார்க்க

## திருகோணமலையில் இயந்திரப் படகுகளுக்கு சிங்களப் பெயர்!

திருகோணமலைத் துறைமுகத்துக்குப் புதிதாக அனுப்பப்பட்டுள்ள இரண்டு இயந்திரப் படகுகளுக்கு சிங்களப் பெயர் சூட்டப்பட்டிருப்பது கண்டு திருகோணமலை தமிழ் மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

இப்படகுகளின் பெயர் முறையே T.36. 'வெலகோவா' என்றும் T.37. 'அலகோவா'—என்றும் பெயரிடப் பட்டுள்ளது. இவற்றுக்கு முறையே 'கோணேஸ்வர புரவி', 'அந்தோனியார் புரவி எனவும் பெயர் மாற்றப்பட வேண்டுமென்று திருகோணமலைத் தமிழ் மக்கள் கோரிவருகிறுர்கள். இது சம்பந்தமாகதிருகோணமலை பா. உ. திரு. பா. நேமிநாதன் நடவடிக்கை எடுத்து வருகிறுர்.


'மனிதனுடைய தகைமையை அவனுடைய வாழ்வு விளக்குகிறது.'

—தர்மசக்கரம்.

காலம் பெறுமதியானது. காலத்தை வீணுக்காதீர்கள். மில்க் வைற் சலவை பவுடர் வாங்கிப் பாவித்து நேரத்தையும், பணத்தையும் மிச்சப் படுத்துங்கள். பாவித்த மேலுறைகளை அனுப்பி மிக உயரிய பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## அரசியல் நிர்ணய சபையில் இனியும் என்ன வேலை?

தமிழ் பிள்ளைகளுக்கு தமிழ்மொழியே பயிற்சிமொழியாக இருக்கவேண்டுமென்ற தமிழ் மக்களின் ஏகோபித்த கோரிக்கையை சிங்கள அரசியல் நிர்ணயசபை இவ்வாரம் தனது பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தி காலின் கீழ் போட்டு நசுக்கி விட்டது!

இந்தக்கோரிக்கை கட்சி அடிப்படையிலே விடுக்கப்பட்ட ஒரு கோரிக்கையல்ல — இந்நாட்டுத் தமிழ் மக்களிடையே இயங்கிவரும் நான்கு தமிழ்கட்சிகளும் இக்கோரிக்கையில் ஒன்றுபட்டு நிற்கின்றன; இந்நாட்டுத்தமிழ் மக்களிடையேயுள்ள—அரசியற் சார்பற்ற—கல்வியாளர்கள், அறிஞர்கள் எல்லாம் தாய்மொழிப் போதனையையே வலியுறுத்தி வருகிறார்கள்;

ஏன், உலகத்திலுள்ள பேரறிஞர்கள், கல்வி நிபுணர்கள் அனைவருமே—ஒரு குழந்தைக்கு அதன் தாய் மொழியிலேயே கல்வியூட்டப்பட வேண்டுமென்ற கருத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

கட்சி சார்பற்ற முறையில் இந்நாட்டுத் தமிழ்தேசிய இனத்தால் விடுக்கப்பட்ட இந்தக் கோரிக்கையை—உலகப் பேரறிவாளர்கள் ஒப்புக்கொண்ட கருத்தை—சிங்கள மக்களை எந்த விதத்திலும் பாதிக்காத முறையில் தமிழ் மக்களுக்கு வழங்கப்படக்கூடிய இந்த அடிப்படை உரிமையை—அரசியல் நிர்ணயசபை முற்றாகத் தூக்கியெறிந்துவிட்டது என்றால் அதன் அர்த்தம் என்ன?

தமிழே தமிழ் பிள்ளைகளின் போதனா மொழியாக இருக்க வேண்டுமென்ற தர்மநியாயமான கோரிக்கை மறுக்கப்பட்டிருக்கிறதென்றால் அதன் பொருள் என்ன?

நாளாவட்டத்தில் மெல்ல மெல்ல தமிழ் பிள்ளைகளின் போதனா மொழியாகச் சிங்களமே திணிக்கப்படப் போகிறது என்பதுதான் அதன் பொருளாகும்! ஈழத்தில் தமிழினம் படிப்படியாக அழித்தொழிக்கப்படவிருக்கிறது என்பதுதான் அதில்மண்டிக்கிடக்கும் உண்மையாகும்!

மொழியே ஒரு இனத்தின் தனித்தன்மைக்கு எடுத்துக்காட்டாக—அவ்வினத்தின் உயிரோட்டமாக—விளங்குவது! ஒரு இனம் தனது சொந்த மொழியிலேயே பயிற்சிபெறும் உரிமை மறுக்கப்படுமானால் அந்த இனம் ஒருபோதுமே முன்னேற்றமடைய முடியாது!

இந்த நாட்டின் ஆதிக்க மொழி—ஆட்சிமொழி சிங்களம் மட்டுமே என்பது சட்டபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது: இந்நிலையில், காலகெதியில் சிங்களமே போதனா மொழியாகவும் தமிழ் மக்கள் மீது திணிக்கப்படுமானால் இன்னும் இரண்டு தலைமுறையில் தமிழினம் வாழ்ந்தகதை வரலாறாகிவிடும்!

எனவே தாய்மொழியே பயிற்சி மொழியாக வேண்டும் என்னும் தமிழர்களின் உயிருக்குயிரான கோரிக்கையை ஒப்புக்கொள்ள மறுத்ததன் மூலம் தமிழ் இன அழிவுக்கு பெரியதோர் சவக்குழியை வெட்டியிருக்கிறது சிங்களவர்களைப் பெரும்பான்மையினராகக்கொண்ட அரசியல் நிர்ணயசபை!

சிங்கள மக்களையோ சிங்கள மொழியையோ எது விதத்திலுமே பாதிக்காத—பயிற்சி மொழிக் கோரிக்கையே ஏற்றுக்கொள்ள மறுத்து குறுகிய இனவாத—கட்சி அரசியலடிப்படையில் நடந்து கொண்ட அரசியல் நிர்ணயசபை,

நீதிமன்ற மொழி,

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழி,

அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு பதில் பெறும் மொழி,

போன்ற விடயங்களில் தமிழ் பேசும் மக்கள் சார்பில் விடுக்கப்பட்டுள்ள குறைந்த பட்சக் கோரிக்கைகளை அப்படியே ஏற்றுக் கொள்ளும் என்று இனியும் நாம் எதிர்பார்த்திருப்பது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வது போன்ற செயலாகும்!

தமிழ் பேசும் மக்களின் குறைந்த பட்ச மொழியுரிமைகளைக் கூட ஏற்றுக்கொள்ள மறுக்கும் அரசியல் நிர்ணய சபையில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் தொடர்ந்தும் அங்கம் வகிக்காது காலதாமதமின்றி அதிலிருந்து வெளியேற வேண்டும்!

அரசியல் நிர்ணய சபையில் தமிழ் பிரதிநிதிகளுக்கு இனியும் வேலை இருப்பதாக நாம் நினைக்கவில்லை. அதில் தொடர்ந்தும் அங்கம் வகிப்பதன் மூலம் தமிழினத்துக்கு எதையாவது சாதிக்க முடியும் என்று நாம் நம்பவுமில்லை.

கட்சி அரசியல் மாச்சரியங்களை கடந்துநின்று தமிழ்பேசும் மக்களின் குறைந்த பட்சக் கோரிக்கைகளை பெருந்தன்மையுடன் அரசியல் நிர்ணயசபைஏற்றுக்கொள்ள மறுக்கும்போது, தொடர்ந்தும் நம் பிரதிநிதிகள் அதில் அங்கம் வகிப்பது தமிழினத்துக்கு இழிவாகவே முடியும்!

புதிய அரசியலமைப்பினை உருவாக்குவோம்; சோசலிச சமுதாயத்தை காண்போம் வாருங்கள்; என்று பெரும்பான்மை இனப் பிரதிநிதிகள் அழைத்தார்கள். பழைய மனஸ்தாபங்களை மறந்து, பெருந்தன்மையுடன் நமது பிரதிநிதிகளும் அதில் கலந்து கொண்டனர். அதே பெருந்தன்மை பெரும்பான்மை இனத்தினரிடம் இல்லாதபோது, தமிழ் மக்களுக்கு அரசியல் நிர்ணய சபையை பகிஷ்கரிப்பதை தவிர வேறு வழிதான் ஏது?

இன்றைய சூழ்நிலையில்—அவசரகாலச் சட்டம், ஊரடங்குச் சட்டம் போன்றவை இருக்கும் நிலையில்—வெளியேறினாலும் எதிர்ப்பு இயக்கம் ஏதும் நடத்துவது இயலாதே என்று ஒரு சிலர் கேட்கலாம்!

# தரப்படுத்தல் நடைபெறவில்லை; நடந்தது தமிழ் மாணவர் புறக்கணிப்பே!

பண்டிதர் கேள்வி அம்பலப்படுத்திய உண்மை

பேராதனைப் பல்கலைக் கழகத்துக்கு பொறியியல் பயிற்சி நெறிக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டதைபற்றிகல்வி அமைச்சரிடம் ஊர்காவற்றுறைப் பா. உ. திரு. கா. பொ. இரத்தினம் கேட்ட கேள்விக்கு பின்வரும் விடை நாடாளுமன்றத்தில் கொடுக்கப்பட்டது—

(அ) புள்ளிகள் தரமாக்கும் வேலை ஒன்றும் நடைபெறவில்லை:

(ஆ) பேராதனைப் பல்கலைக்கழகத்து இயந்திரவியல் பயிற்சி நெறிகளுக்கு ஆரம்பத்தில் மாணவர்கள் இம்முறையிலேயே அனுமதிக்கப்பட்டனர். தெரிவு செய்யப்பட்டவர்கள் பயிற்சி நெறிகளில் சேர மறுத்தமை போன்ற காரணங்களால் ஏற்பட்ட காலி இடங்களை நிரப்புவதற்கு பின்னர் ஆகக் குறைந்தது 225 புள்ளிகளைப் பெற்ற சிங்கள மொழி மூல மாணவர்களும் ஆகக் குறைந்த 249 புள்ளிகளைப் பெற்ற தமிழ் மொழி மூல மாணவர்கள் இப்பயிற்சி நெறிக்கு அனுமதிக்கப்பட்டார்கள்.

(இ) சிங்கள மொழி மூல மாணவர்கள் பெற்ற ஆகக் கூடிய புள்ளி 338; தமிழ் மொழி மூல மாணவர்கள் பெற்ற ஆகக் கூடிய புள்ளி 328. ஆங்கில மொழி மூல மாணவர்கள் 271.

விஞ்ஞான பிரிவுக்கு சிங்கள மொழி மூலம் தோற்றிய மாணவர்கள் தமிழ் மொழி மூலமாணவர்களை விட 10 புள்ளிகள் கூட எடுத்துள்ளார்கள்.

## ‘இந்திய தூதரக நூல் நிலையத்தில் தமிழ் நூல்கள் இல்லையே...!’ தமிழக அரசுக்கு முறையீடு!

‘கொழும்பிலுள்ள இந்திய தூதரக நூல் நிலையத்தின் வாசகர்களின் எண்ணிக்கையில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து வீதமானோர் தமிழராய் இருப்பினும் அந்நூலகத்தில் தகுதி வாய்ந்த போதிய எண்ணிக்கையுள்ள தமிழ் நூல்களோ சஞ்சிகைகளோ இல்லாதது கவலையை அளிக்கிறது. இக்குறையை உடனடியாக நீக்கி தமிழ் மக்களின் அறிவுப்பசியை தீர்க்க துணைபுரியுமாறு வேண்டி நிற்கிறோம்.’

—இவ்வாறு தமிழ்நாடு அரசு செய்தித்துறை அமைச்சருக்கு இலங்கை மத்திய வங்கித் தமிழிலக்கிய மன்றம் அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில் கோரியிருக்கிறது.

## தனி ஆட்சி...

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

தில் நடைப்பிணங்களாய், நாதியற்றவராய் ஆகிவிடுவோமோ என்ற ஐயம் தமிழ் மக்களை பீடித்துள்ளது:

ஈழத்தைச் சங்கிலி மன்னன் ஆண்டான். போத்துக்கேயரைஎதிர்த்துப்போராடி வீரமரணம் எய்தினான். பண்டாரவன்னியனும்அதுபோல் போராடினான். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடி முடியும் கொடியும், முத்தமிழ் வீச அரசோச்சினர் தமிழர்! நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இது சரித்திரம் கூறும் உண்மையாகும்.

(முழுப் பேச்சும் அடுத்த வாரம்)

## தூக்கி யெறிந்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறைந்த பட்சக் கோரிக்கைகளில் இந்தப் பயிற்சி மொழி கோரிக்கையும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

தாய் மொழி மூலமாகவே அரசாங்க சேவைப் பரீட்சைகளை எடுக்கவும், கூட்டுத்தாபனங்களில் அல்லது அரசாங்க நிறுவனங்களில் சேரவும் ஒவ்வொருவருக்கும் உரிமை இருக்க வேண்டும் என்ற தமிழரசாரின் திருத்தமும் நிராகரிக்கப்பட்டிருக்கிறது;

பிரஜாவுரிமை, சாதி ஒழிப்பு சம்பந்தமான தமிழரசாரின் திருத்தங்களும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை!

தமிழரசாரின் மேற்கண்ட திருத்தங்கள் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட நேரத்தில் ஆளுங்கட்சிவால்பிடிகளான தமிழ் காங்கிரஸ் பா.உ.க்கள் மூவரும் சபையில் இருக்காது நழுவிவிட்டது குறிப்பிடத்தக்கது.

# தினபதி கும்பலின் கயிறு திரிப்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

“முதலமைச்சர் பேசுகையில் எனக்கும் அவருக்கும் ஏதோ கருத்துவேறுபாடுகள் இருப்பதாக ஒரு பத்திரிகை செய்தி போட்டிருப்பதாக கூறினார்கள். எங்களைப் பற்றி ஜாதகம் கணிக்கிற நண்பர்களுக்கு ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

‘வாழ்ந்தால் நாங்கள் இருவரும் வாழ்வோம்—வீழ்ந்தால் இருவருமே வீழ்வோம்

இதைத்தவிர அவர்களுக்கு கூற வேறு வார்த்தைகளே என்னிடம் கிடையாது.

வேறு யாராவது தப்புக் கணக்கு போடுவார்களானால் அவர்கள் ரோடு ரோலரில் மாட்டிக்கொண்டவர்களாகத்தான் ஆவார்கள்.”

—இப்படி எம். ஜி. ஆர் கூறினார்.

இவ்விழாவில் முதல்வர் மு.க. பேசுகையில் கூறியதாவது:—

“புரட்சி நடிகர் அவர்களுக்கும் எனக்கும் ஏதோ கருத்து வேறுபாடு இருப்பதாகச் சிலர் வீண் வதந்திகளைக் கிளப்புகிறார்கள். அப்படி கிளப்புவோர்க்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனக்கும் புரட்சி நடிகர் அவர்களுக்கும் இருக்கிற உறவு வெகு நெருக்கமானது. பதினைந்து இருபது ஆண்டுகளாக உள்ள இந்த நெருக்கம் எந்தக் காரணத்தினாலும் மாறுபட்டதில்லை.

“நான் எழுதிய படத்தில் அவர் நடித்திருக்கிறார். அதனால் கலையுலகிலும் எனக்கு நெருக்கமாயிருக்கிறார்.

கோவை ராமனாதபுரத்திலே அவர் இருந்த காலத்தில் நான் சிங்காநெல்லூரில் இருந்திருக்கிறேன். பிளேகிஎலியின் உதவியால் நான் எனது குடும்பத்தை ஊருக்கு அனுப்பிய பிறகு, நானும் எம். ஜி. ஆர் அவர்களும் ராமனாதபுரத்தில் ஒரே வீட்டில் மூன்றுமாதம் குடியிருந்தோம். அப்போது எங்கள் நெருக்கம் வீட்டு நெருக்கமாக இருந்திருக்கிறது.

“அப்போதெல்லாம் அவர் முரட்டுக் கதர் அணிந்து கொண்டு காந்தியவாதியாக இருந்தார். நான் பெரியார் அவர்கள் பாசறையில் கழகத்தில் இருந்தேன். அப்படியிருந்தபோது அவர் அரசியலில் என்னை அங்கே இழுக்கப் பார்த்து—நான் அவரை இழுக்கப் பார்த்து அதன் முடிவு என்ன என்பதை நீங்களே அறிவீர்கள்.

“படத் தயாரிப்பாளனாக நான் இருந்தபோது அவர் நடிகராகத் தொடர்பு கொண்டிருந்திருக்கிறார். என்னோடு தயாரிப்பில் பங்குதாரராக இருந்திருக்கிறார். நான் கழகத் தலைவராக இருக்கிறேன்; இவர் கழகப் பொருளாளராக இருக்கிறார். கட்சியிலும் இப்படி நாங்கள் ஒருவருக்கொருவர் தொடர்புடனே இருந்து வருகிறோம். சிறு சேமிப்புத்துறையில் தமிழக முதல்வர் என்கிற முறையில் நான் தலைவராக இருக்கிறேன்; இவர் துணைத் தலைவராக இருக்கிறார்.

“இப்படி பதினைந்து இருபது ஆண்டுகளாக நாங்கள் எந்தத் துறையில் இருந்தாலும் அந்தத் துறையில் நெருக்கமாகவே இருந்திருக்கிறோம்.

“இதை எண்ணிப்பாராமல் சில பிஞ்சு மனங்கள்—பித்து மனங்கள்—தங்களுக்குத் தோன்றியதையெல்லாம் வதந்திகளாக்குகின்றன.

“நாங்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்; பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு தடவை கூறினார்கள்.

மரத்திலிருந்த எம்.ஜி.ஆர். என்ற கனி என் மடியில் விழுந்தது; அதை எடுத்து இதயத்திலே வைத்துக் கொண்டேன் என்றார். அந்த அன்புக்குரிய அண்ணன் மறைந்த பிறகு “அண்ணா! உன் இதயத்தை இரவல் தா அண்ணா!—என்று நான் கேட்டேன். அவர் கொடுத்திருப்பார் என்ற நம்பிக்கையில சொல்கிறேன். அந்த இதயத்தோடு எம். ஜி. ஆரையும் சேர்த்துத்தான் நான் பெற்றிருக்கிறேன்.

அநீதியான முறையில், தமிழ் மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளை ஏற்க மறுக்கும் அரசியல் நிர்ணய சபையுடன் ஒத்துழைக்க மறுத்து அதிலிருந்து வெளியேறுவதுகூட ஓர் எதிர்ப்பு நடவடிக்கைதான்!

எதிர்காலத்தில் தமிழினம் தனது உரிமைகளுக்காக—சுயநிர்ணய உரிமைக்காக போராடுவதற்குரிய பாதையை அடைத்து விடாமல் இருப்பதே இன்று நாம் செய்யவேண்டிய முக்கிய கடமையாகும்.

தமிழ்ப்பேரறிஞர்களின் செவிகளில் நாம் சுட்டிக்காட்டியுள்ள இந்த உண்மை ஏறுமென்று நம்புகிறோம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி ஆதிக்கம் 'சோசலிசம்' ஆகுமா?

அன்பு நண்பா,

'பார், பார் தமிழ் நாட்டினைப் பார்; திராவிட முன்னேற்றக் கழகத்தினைப் பார்; அவர்களன்றோ முற்போக்கு வாதிகள்; தமிழ் இன உரிமைக் கோரிக்கைகளையெல்லாம் தூர வீசி விட்டு இந்திரா அம்மையாருக்கு சாமரம் வீசுகிருர்கள் சோசலிச சமுதாயத்தை அமைத்திட; இந்திய தேசிய ஒற்றுமைக்காக இந்தி எதிர்ப்பினையும் கை நழுவ விட்டு விட்டார்; சோசலிச சமுதாய அமைப்பினைக் கண்டிட தோளோடு தோள் நின்று உழைத்திடுக்கின்ருர் இந்திரா அம்மையாருடன்; தொட்டதற்கெல்லாம் தமிழ் நாட்டினை உதாரணம் காட்டிடும் தமிழரசுக்கட்சியினர் இந்த விஷயத்திலும் தமிழ் நாட்டினையன்றோ பின்பற்றிடவேண்டும்; மொழி, இனத்தகராறுகளை மூட்டைகட்டி வைத்து விட்டு, சோசலிச சமுதாயமமைத்திட இந்திராவுடன் தி. மு. க. வினர் எப்படி ஒரே அணியில் நின்று உழைத்திடுகின்றனரோ, அதேபோல இங்கும் தமிழரசுக்கட்சியினர் சிறிமாவோ அம்மையாருடனன்ரே ஒத்துழைத்திடவேண்டும்: மொழி, இனப்பிரச்சினைகளை பேசிக்கொண்டிருப்பதை தமிழரசார் கைவிடவேண்டும்''

—இப்படி ஒரு பிரசாரத்தினை இந்நாட்டிலேயுள்ள தமிழ் கம்யூனிஸ்டுகளும், ஆளுங் கட்சிக்கு ஆலவட்டம் வீசிடும் தமிழ் காங்கிரஸ் முக்காலிகளும் கடந்த சில காலமாக—குறிப்பாக இந்தியப் பொதுத் தேர்தல் நடைபெற்ற காலங்களில்—தீவிரமாக நடத்தி வந்திருப்பதனை நீ அறிந்திடுவாயே நண்பா!

இத்தகைய பிரசாரத்தினை அவர்கள் மேற்கொண்ட நேரத்தில் நாம் விலாநோகச் சிரித்தோம். திராவிட முன்னேற்றக் கழகத்தினைப் பற்றி—தமிழ்மொழி காத்திட அண்ணு எழுப்பிய அரணைப் பற்றி—இதுகாலவரை திராவிட முன்னேற்றக் கழகத்தினை திட்டுவதையே தம் பிறவிப் பயனாகக் கருதிக்கொண்டிருந்தவர்கள்—கழக உணர்விலே தோய்ந்த நமக்கு 'விளக்கம்' தந்திட முயற்சிக்கும்போது நமக்கு சிரிப்பு வராதா என்ன?

திராவிட முன்னேற்றக் கழகம் 'சோசலிச மயக்கத்தில்' மொழி, இனப் பிரச்சினைகளைக் கைவிட்டுவிட்டது கூறிடுவோர் — அண்ணுவின் பாரம்பரியத்தை அறியாதோர்; முன்னேற்றக் கழகத்தின் முழுமுதல் நோக்கத்தை — இந்தி ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வை—தமிழ் எழுச்சியினை, உணர்ச்சியினை அடித்தளமாகக்கொண்டே கழகம் கட்டியெழுப்பப்பட்டுள்ளதென்ற உண்மையினை—உணர்ந்திட மறுப்போர்; என்று எடுத்துரைத்தோம்!

இந்திரா காந்தியோடு தி.மு. கழகம் ஒத்துழைப்பதற்கும், இங்கு தமிழரசுக் கட்சியினர் சிறிமா அரசுடன் ஒத்துழைக்கவேண்டும் என்று கோரப்படுவதற்கும் வித்தியாசம் நிரம்ப உண்டு; அங்கு இந்திரா அம்மையார் தமிழர்கள் மீது இந்தியைத் திணித்திடவில்லை; தமிழக உரிமைகளை மறுத்திடவில்லை; தமிழ் மக்கள் மீது இந்தி திணிக்கப்படுமானல் — தமிழ் நாட்டின் உரிமைகள் பறிக்கப்படுமானுல் — தி. மு. கழகம் இந்திரா அரசுக்கு 'சோசலிசத்தின்' பெயரால் 'ததாஸ்து' போட்டுக்கொண்டிராது; துள்ளியெழுந்து போராடும்; இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் உணர்ச்சிகளை—அதன் கடந்தகால வரலாற்றினை—புரிந்தவர்களுக்கு தெரிந்திடும்; அங்குள்ள நிலைவேறு; இங்குள்ள நிலை வேறு; இங்கு சோசலிசத்தின் பெயரால் தமிழினத்தை முற்ருக ஒழித்துக்கட்டிவிட முயலுகிறது அரசு; இந்த அரசுடன் தமிழரசுக் கட்சியினர் எப்படி ஒத்துழைத்திட முடியும்; இதையும் அதையும் ஒப்பிட்டு தமிழ் மக்களைக் குழப்பிட முயலாதீர்; என்று ஒப்பாரி வைத்துத்திரிந்த 'ஒத்துழைப்புத் தம்பிரான்களுக்கு' பதிலளித்திட்டோம்; உண்மைதனை மக்கள்முன் உலவவிட்டோம்!

'முற்போக்குப் போர்வையின்கீழ் மத்திய அரசு தமிழ் மக்கள் மீது இந்தியைத் திணித்திடுமானுல்—தமிழ்நாட்டின் உரிமைகளைப் பறித்திட முயலுமானுல்—பதவிகளை உதறி எறிந்துவிட்டு தி.மு. கழகம் போராட்டத்தில் குதித்திடும்; என்று தமிழக முதல்வர் கலைஞர் விடுத்த எச்சரிக்கையையும் தி.மு. கழகத்தை வைத்துக்கொண்டு இங்கு தப்புப் பிரசாரம் செய்துவந்த 'மதோன்மத்தர்களுக்கு' சுட்டிக்காட்டினேம்!

சோசலிச முகமூடியின் கீழ், இந்திரா அரசு இந்தியைத் திணித்திடுவதையோ, தமிழ்மொழியின் உரிமைகளை அபகரித்திடுவதையோ திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு சிறிதளவும் சகித்துக்கொண்டிராது; சோசலிசத்தைவிட சுந்தரத் தமிழ் மொழியின் வாழ்வே கழகத்தவர்க்கு முக்கியமானது; என்ற உண்மை — இந்தியப் பொதுத் தேர்தல் முடிவடைந்து மூன்றே திங்கள் கழிவதற்கிடையில் — இந்திய அரசுக்கு மட்டுமல்ல; தி.மு. கழகத்தை உதாரணம் காட்டி, தமிழரசுக் கட்சியினர் 'சோசலிசத்தின் பெயரால்' மொழி, இனப்பிரச்சினைகளைக் கைவிட்டு சிறீமா அம்மையாருடன் ஒத்துழைத்திடவேண்டும் என்று கூறிவந்த 'ஒத்துழைப்புத் தம்பிரான்களுக்கும்' இப்போது தெரிந்திருக்க வேண்டும்!

ஆம் நண்பா, மத்திய அரசாங்க அமைச்சர்களின் பதவிப் பெயர்களையும், அமைச்சுக்களின் பெயர்களையும் இந்தியில் மட்டுமே அழைத்திடவேண்டும் என்று ஓர் சுற்றறிக்கையை இந்திரா அரசு அண்மையில் வெளியிட்டிருந்தது; டெல்லியின் இந்த இந்தி திணிப்பு அறிக்கையை எதிர்த்து டெல்லிப் பாராளுமன்றத்தை—ஏன் அனைத்திந்தியாவையுமே—கிடுகிடுக்க வைத்துவிட்டது திராவிட முன்னேற்றக் கழகம்!

இந்தியைத் திணித்திடின் மீண்டும் போராட்டமே வெடித்திடும்; தமிழ்நாடு ரணகளமாகும்; உங்கள் சோசலிசப் பேச்சுக்கண்டு உலகம் சிரித்திடும்! என்று தி.மு. கழகம் எச்சரித்து எதிர்த்துப் பொங்கியெழுந்ததன் பயனாக 'இந்தியுடன் ஆங்கிலம்' என்ற சமரசத் திட்டத்தை இந்திரா அம்மையார் அறிவித்தார். அதைக்கூட ஏற்றுக்கொள்ளாது இந்தி பற்றிய அறிக்கையை முழுவதும் வாபஸ் பெறும்படி கோரி கிளர்ச்சி நடத்திவருகிறது தி.மு. கழகம்! டெல்லிப் பாராளுமன்றத்தில் கேள்வி நேரத்தை பகிஷ்கரித்தும் வருகிறது!

## அரசியல் மடல்

சோசலிசத்தின் பெயரால் இந்தி கிஞ்சிற்றேனும் திணிக்கப்படுவதைக் கண்டு சகித்துக்கொண்டிருக்கவில்லை தி.மு. கழகம். 'சோசலிசம்' 'தேசிய ஒற்றுமை' என்ற மாயத்திரைகளின் கீழ் தமிழ்மொழி மீது வேற்று மொழி ஆதிக்கம் திணிக்கப்படுவதைக்கண்டு பொங்கியெழுந்தது திராவிட முன்னேற்றக்கழகம்! இதை 'சோசலிசத்துக்காக' சொந்த இனத்தையும் மொழியையும் காட்டிக்கொடுத்திடும் நம்மிடையேயுள்ள சோற்றுத் துருத்திகள் சிந்தித்திட வேண்டும்!

வர்க்கரீதியான ஆதிக்கத்தை எதிர்ப்பது மட்டும் சோசலிசமாகாது; இன, மொழி ஆதிக்கத்தை எதிர்த்திடுவதும் ஒரு உண்மையான சோசலிசவாதியின் இலட்சியமாக இருந்திடவேண்டும்!

ஒரு வர்க்கம், இன்னெரு வர்க்கம் மீது ஆதிக்கம் செலுத்திடுவதும், உறிஞ்சிவாழ்ந்திடுவதும் எப்படி சோசலிசம் ஆகாதோ அதேபோல ஒரு இனம் இன்னெரு இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதும், ஒரு மொழியைக் கொண்டு இன்னெரு மொழியை நசுக்க முனைந்திடுவதும் ஒருபோதும் சோசலிசமாகாது!

ஓர் உண்மையான பொதுவுடமைவாதி—'மார்க்ஸீயவாதி'—மொழி ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்பவனுக இருந்திடமுடியாது; ஏனெனில் மார்க்ஸீயம் என்பது எவ்வகையான ஆதிக்கத்தையும் ஏற்றுக்கொள்ளாதது மட்டுமல்ல; அவற்றை எதிர்த்திடுவது!

மொழி சமத்துவம் என்பது பொருளாதார சமத்துவத்தின் பிரிக்கமுடியாத ஒரு பகுதி; பொருளாதார சமத்துவம் இல்லாத மொழி சமத்துவம்கூட சில நாட்கள் நிலைத்து நின்றிடலாம்; ஆனுல் மொழிச் சமத்துவம் இல்லாத பொருளாதார சமத்துவம் சில நாட்கள் கூட நிலைத்து நிற்காது என்பது மட்டுமல்ல—அர்த்தமற்றதும்கூட!

## 'அரசியல் மடல்' பற்றி 'வெள்ளி' ஏடு கருத்து!

சுதந்திரன் பத்திரிகையில் இப்போது ஆசிரியராக இருப்பவர் கோவை மகேசன். அண்ணு தனது 'திராவிட நாடு' பத்திரிகையில் 'தம்பிக்கு' என்ற தலைப்பில் கொள்கை விளக்கம் கூறும் மடல்களை எழுதி வந்ததுபோல, கோவை மகேசனும் சுதந்திரன் பத்திரிகையில் கொள்கை விளக்கம் கூறும் அரசியல் மடலை எழுதி வருகிருர். அறிஞர் அண்ணுவின் அதே பாணி! அதே நடை! இவரது மடல்களை பல இளைஞர்கள் ஆர்வத்தோடு விரும்பிப் படிக்கிருர்கள்.

—'வெள்ளி' (மே 1971 இதழில்!)

நண்பா, மொழி ஆதிக்கம் காலப்போக்கில்—மிக விரைவில் பொருளாதார ஆதிக்கமாகவும் மாறிவிடும் என்பது வரலாறு காட்டிடும் உண்மையன்ரோ! எனவே மொழி ஆதிக்கத்தினை ஏற்றுக்கொள்பவனை மார்க்சீயவாதியென்று நாம் எப்படிக்கூறிட இயலும்?

இந்த வகையிலே பார்த்திடும்போது, இந்நாட்டிலே உண்மையான சோசலிசவாதி, மார்க்சீயவாதி, பொதுவுடமை வாதி யார் என்பது தெரிகிறதன்ரோ உனக்கு?

இன்று சோசலிசம் பேசத்துவங்கியிருக்கும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியினரே 'சிங்களம் மட்டும்' என்ற சட்டத்தை ஆக்கி வைத்து சிங்கள மொழி ஆதிக்கத்தை உருவாக்கியவர்கள்!

பொதுவுடமையர் தாங்களே என்று கூறிக்கொள்ளும் பீட்டர் கெனமன், வி. பொன்னம்பலம் கும்பல், சிங்கள மொழி ஆதிக்கத்தை முழுக்க முழுக்க ஏற்றுக்கொண்டிருக்கிறது; தமிழுக்குசமத்துவம் தரப்படுவதை எதிர்க்கிறது!

'ட்ராஸ்கி'யைப் பின்பற்றுவதாகக் கூறும் சமசமாசக்கட்சியினர் சிங்களமொழி ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டு தமிழுக்கு சமத்துவம் தரப்படுவதை எதிர்க்கிருர்கள் இப்போது!

'சமதர்மவாதிகளின்' நிலையே இதுவென்ருல் முதலாளித்துவ வாதிகளான யூ. என். பி. யினர் பற்றி கூறுவதற்கு என்ன இருக்கிறது? தமிழ் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களும், மற்றும் ஒரு சில உதிரித்தமிழர்களும் சிங்களமொழி ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டு சரணுகதியடைந்து சாஷ்டாங்கமாக வீழ்ந்து கிடக்கிருர்கள்!

இத்தகைய மொழி வெறியர்களாலும், அவர்களுக்கு துணை போகின்றவர்களாலும், ஒரு போதும் சோசலிச சமுதாயத்தை அமைத்திட முடியாது. இவர்கள் தங்கள் மொழிவெறியினைக் கருவியாகப் பயன்படுத்தி மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்திட்வே விரும்பி வருகிருர்கள்.. எனவே இவர்கள் ஒரு போதும் சோசலிச வாதிகளாக இருந்திடமுடியாது!

இந்நிலையில் சிங்களமொழி ஆதிக்கத்தினை எதிர்த்து, தமிழுக்கு சமத்துவம் கோரி போராடிவரும் ஒரே இயக்கம் நமது தமிழரசு இயக்கம்தான்; இந்த வகையில் நாமே உண்மையான சோசலிஸ்டுகள்; பொதுவுடமை வாதிகள் என்பதை அரசியலறிந்தோர் ஏற்றுக்கொண்டிடுவர்!

ஆம் நண்பா, அரசியல் நிர்ணய சபையில் உரையாற்றிய தம் அருமைத் தந்தை அவர்கள் கூட இதை திட்டவட்டமாகக் கூறியிருக்கிருர்;

'சிங்களம் மட்டும் சட்டம் ஒரு அநியாயச் சட்டம்; அதை இந்நாட்டுத் தமிழர்கள் ஒருபோதுமே ஏற்க மாட்டார்கள்.'

என்று செல்வா அவர்கள் அரசியல் நிர்ணய சபையில் தெளிவாக எடுத்துரைத்திருக்கிருர்!

சிங்களம் மட்டும் சட்டம் வந்து ஏறத்தாழ 15 ஆண்டுகள் கழிந்தும் சிங்களமொழி ஆதிக்கம் தமிழர்கள் மீது திணிக்கப்படுவதை எதிர்ப்பது என்ற திடமான இலட்சியத்திலிருந்து தமிழரசுக்கட்சியும் தமிழினமும் இம்மியும் விலகவில்லையென்பதையன்ரோ செல்வாவின் எச்சரிப்பு எடுத்துக்காட்டுகின்றது!

சிங்களம் மட்டும் சட்டம் என்பது அரசாங்க அலுவல்களை சிங்கள மொழியில் நடத்துவது என்பது மட்டுமல்ல—அது ஓர் அரசியல் பொருளாதார ஆதிக்கப்பிரச்சினையுமாகும்!

இரண்டு மொழிகள் பேசும் மக்கள் வாழும் ஓர் நாட்டில் ஆட்சி மொழியொன்ருனல நாடு இரண்டுபடும்; நாடு ஒன்ருக இருந்திடவேண்டுமானுல் ஆட்சி மொழி இரண்டாக இருந்திடவேண்டும்: இந்த உண்மையை சிங்களமொழி ஆதிக்கத்துக்கு முட்டுக்கொடுப்போர் உணர்ந்து இரண்டில் ஒரு முடிவுக்கு வந்திடவேண்டும்! நாட்டின் ஒருமைப்பாட்டினைப் காப்பதற்கு இரண்டு மொழிகளுக்கும் சமத்துவம் தரப்படவேண்டும்—அன்றேல் நாட்டின் ஒருமைப்பாடு சின்னு பின்னப்படுவது தவிர்க்கமுடியாததாகிவிடுவதை உலகவரலாறுகள் எடுத்துரைத்திடுகின்றன.

இருமொழிக்கும் சம உரிமை அளிக்க மறுக்கப்படும் போதுதான், ஒரு மொழிக்கு ஒரு நாடு என்ற தத்துவம் தலை தூக்குகிறது!

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஒத்துழைப்பு' என்று கூறி ஒத்தூதுவோரே! ஒத்துழைப்பு ஒத்துவருமா? நிரூபியுங்கள்!

சோசலிசத் தலைவர்களாக அண்மைக் காலங்களில் பரிணமித்துள்ள சிலர் ஒரு புது அரசியற் கொள்கையொன்றை உரத்த குரலில், திருப்பித் திருப்பிப் பாடி வருகின்றார்கள். தற்பொழுது எந்தக் கட்சியில் இருக்கின்றார்கள் என்று எவருக்கும் தெரியாத பாராளுமன்ற மும்மூர்த்திகளும், இடதுசாரித் தலைவர் குழாமும், தமிழமைச்சரும் இந்த பஜனைக் குழுவின் அங்கத்தினர்கள். இந்தக் குழுவுக்குத் தாளம் போடும் பொறுப்பை 'தமிழரசு என்றால் தனது காலன்' என்று எண்ணும் ஒரு தினசரி ஏற்றுக்கொண்டுள்ளது.

வார இதழில் ஆளுங்கட்சிகளின் நிறத்தில், ஆளுங்கட்சியின் சின்னத் தலைவர்களும் சின்னச் செய்திகளையெல்லாம் கொட்டைத் தலைப்பிட்டு வெளியிட்டு வரும் ஏரிக்கரைப் பத்திரிகை இந்தக் கூட்டு வழிபாட்டுக் குழுவிற்கு 'காஸ்லைட்' தூக்கும் பணியை நிறைவேற்றி வருகிறது.

## ஒத்துழைப்பு

இந்தக் குழுவின் கோஷம், 'அரசாங்கத்துடன் ஒத்துழைப் போம்; முன்னேறுவோம்' என்பதுதான். அவர்கள் கோஷத்தின் ஒரு பலனை மட்டும் கண்கூடாக நாம் கண்டு வருகிறோம். அவர்கள் ஒத்துழைக்கிறார்கள். அவர்கள் முன்னேறுகிறார்கள். இது எமக்குப் புரிகிறது. ஆனால் இது எமது இனத்திற்குப் பொருந்துமா என்பதுதான் எமக்குப் புரியவில்லை.

'ஒத்துழையாமை' இன விடுதலைக்கு ஏற்புடையது என்பதை உணர்த்தியிருக்கிறார் காந்தி அண்ணல். அந்த வகையில் ஒத்துழைப்பும் இன விடுதலைக்கு ஒத்துவரும் என்பதை நிரூபிக்க வேண்டியது ஒத்துழைப்புக் குரல் கொடுப்பவர்களின் கடமையல்லவா?

அவர்களின் அந்தக் கடமையை நிறைவேற்றி வைப்பதற்கு நாங்களே சில ஆலோசனைகளைக் கூறி உதவி புரிவதே எம் நோக்கம். எதிர்க்கட்சி தனது எதிர்த் தரப்புக்கு ஆலோசனைகள் கூறி ஊக்குவிப்பது ஜனநாயகபாரம்பரியங்களில் ஒன்றும். எமது ஆலோசனைகளும் அந்த வகையினதே. எதிர்கட்சி தரும் ஆலோசனைகளை நாம் ஏற்றுக்கொள்வது எமக்கு இழுக்கல்லவா என்று சோசலிசத் தலைவர்கள் எண்ணுவார்களாயின், எமது ஆலோசனைகளை சவாலாகவே ஏற்றுக் கொள்ளட்டும். 'ஒத்துழைப்பு எமக்கு ஒத்துவரும்' என்று நிரூபியுங்கள!

## தடை விதிப்பது ஏன்?

எமது இனத்தை எதிர் நோக்கியிருக்கும் மொழிச் சிக்கல், உரிமைப் பிரச்சினைகள், வேலை வாய்ப்புகள், பொருளாதார உதவிகள் எல்லாம் பாரிய விடயங்கள் இவைகளைத் தீர்ப்பதன் மூலம் நிரூபியுங்கள் என்று யாம் கூறவில்லை. நீங்களும் நாங்களும் நியாயமென்று ஏற்றுக் கொள்கிறோமே சில கோரிக்கைகள் — அவற்றை உங்களது ஒத்துழைப்பு இயக்கத்தின் மூலமே தீர்த்து வையுங்களேன்! இதை விட இலகுவான செயல் என்ன இருக்கிறது?

முதலாவது பிரச்சினை, 'ஆனையிறவுத்தடை முகாம்' எமது நாட்டின் உற்பத்திப் பொருளொன்றை எமது

## இடதுசாரிகளுக்குச் சில இலகுவான யோசனைகள்!

நாட்டின் இன்னொரு பகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு தடை விதிப்பது அநியாயம் என்று உங்களுக்குத் தோன்றவில்லையா? அதுவும் ஏனைய பொருட்களுக்கு இல்லாத தடையை யாழ்ப்பாணத்துச் சின்ன வெங்காயத்துக்கு விதித்து தமிழ் விவசாய ஏழை மக்களின், அதுவும் 'தொழிலாளி வர்க்கத்'தினருக்கு விதித்து அவர்கள் வருமானத்தைப் பாழாக்குகிறார்களே இதை நீக்குங்களேன்!

சமூக ஏற்றத் தாழ்வு தானே உங்கள் சோசலிசத்தின் முதல் எதிரி. அதனை நீக்க ஒரு சட்ட மூலத்தைக் கொண்டுவர ஏன் இத்தனை தயக்கம்? புது அரசியலமைப்பை உருவாக்க எடுக்கும் ஆர்வத்தில் பத்தில் ஒரு பங்கை ஆகினும் இதற்கு எடுத்திருக்கிறீர்களா? செய்யுங்களேன் இதை.

### புரியவில்லையா?

தாழ்த்தப்பட்டவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாகவே விளங்க கல்வி வசதியின்மைதான் மூலகாரணம் என்பது இன்னும் உங்களுக்குப் புரியவில்லையா? அவர்களுக்கு கல்வி வசதி வழங்க இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். தாழ்த்தப்பட்டவர்கள் கணிசமாக வாழும் பகுதிகளிலுள்ள மகா வித்தியாலயங்களில் குறிப்பிட்ட சதவிகித இடம் அவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்றுவது ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுங்களேன். அதற்குக் கூடவா உங்கள் 'ஒத்துழைப்பு' பயன்படாது?

அதுகூட வேண்டாமே, உங்கள் அன்பிற்கும், ஆதரவிற்கும், மதிப்பிற்கும் உரிய அரசின் முதலாவது சிம்மாசனப்பிரசங்கத்தில் ஏற்றுக் கொண்டீர்களே தோட்டப் பாடசாலைகளை தேசியமயமாக்குவதாக, அதனை யாவரும் ஏற்றுக்கொண்ட ஒன்றை விரைவு படுத்திச் செய்து முடியுங்களேன்!

இந்த விடயங்களிலெல்லாம் யாருக்கு கருத்துவெறுபாடு இருக்கிறது? அரசாங்கத்தரப்பில் கூட எதிர்ப்பிருக்க நியாயமில்லையே! இவற்றிலெல்லாம் உங்கள் ஒத்துழைப்பு இயக்கம் சித்தி பெற என்ன தடையிருக்கிறது? செய்து முடியுங்கள்!

### காவலூர் சிவன்

உங்களுக்கு மிக மிக இலகுவான விடயங்களைக் கூறி, வழி செய்துவிட்டோம். ஜனநாயக வழியில் நாம் சொன்ன ஆலோசனைகளை சோசலிசபாணியில் செய்து முடியுங்கள். இவற்றைநிறைவேற்ற முயற்சிதானும் எடுக்காவிடில், உங்களின் ஒத்துழைப்பு இயக்கமும், ஒத்துழைப்பு நடவடிக்கைகளும் உங்கள் சுயலாபத்திற்கும், உங்கள் உறவினர் ஆதரவாளர்களின் நலனிற்கும் தானேயன்றி தமிழினத்தின் நலனுக்கல்ல என்பது நிரூபணமாகிவிடும்.

நீங்கள் முயற்சி எடுத்தும் சித்தி பெறமுடியாவிடில் நிபந்தனையற்ற கொள்கையடிப்படையல்லாத ஒத்துழைப்பு நடவடிக்கைகள் எமது இனத்திற்குப் பயனற்றது என்பது நிரூபிக்கப்பட்டுவிடும். இத்தகைய செயற்கெளிய செயல்களைத்தானும் நிறைவேற்றப் பயன்படாத "ஒத்துழைப்பு" செயற்கரிய பெரிய பிரச்சினைகளுக்கு ஒத்து வராது என்பது நிரூபிக்கப்பட்டுவிடும். அதன் பின் 'ஒத்துழையாமை' தான் ஒரே வழி என்பதை நீங்களும் புரிந்துகொள்வீர்கள். அதன் பின்னும் உங்களுக்குப் புரியாவிடில் மக்களாவது உங்களுக்குப் புரியவைப்பார்கள்.

எனவே நாம் காட்டும் பிரச்சினைகளைத் தீர்ப்பதை ஆலோசனைகளாகவோ, சவாலாகவோ ஏற்றுக் கொண்டு செயற்படுங்கள். இல்லையெனில் செ......ங்கள்.

ஒத்துழைப்பு வாதிகளே சொல்லுங்கள் ஒரு பதிலை!

# எல்லா உலகும் பெறும் ஓர் பாடல்

ஒரு பொருளுக்குப் பெருமை அப்பொருளின் உயர்வாகிய தனித்தன்மையில் இல்லை. அப்பொருளைக் கொடுப்பவனுடைய அன்பின் அருமையில் உயர்வு அடங்கியுள்ளது.

நெய்யினால் தாளிதம் புரிந்து பளபளவென்று பூனைக்கண்போல் நல்ல நிறமுள்ள உயர்ந்த உணவாக இருப்பினும், அன்பில்லாதவன் மனையில் ஒரு ஒதுக்கிடத்தில் இருந்து உண்ணும் உணவு வேம்புபோல் கசக்கும்.

''விருப்பிலார் இல்லத்து வேறிருந்துண்ணும் வெருக்கண் வெங்கருணைவேம்பாம்''

என்று கூறுகிறது நாலடியார்.

அன்பில்லாமல் தருகின்ற பொருளை எத்துணை உயர்ந்ததாயினும் அது உயர்வு பெறாது. அன்புடன் தந்த உப்பில்லாத கஞ்சி அன்பின் மிகுதியால் அமிர்தமாகத் தித்திக்கும்.

சபரி என்ற வேடர் குல நரை மூதாட்டி தந்த எச்சிற்கனி இராமருக்கு அமிர்தம் போல் இருந்தது. அன்பின் சிகரமாக விளங்கிய கண்ணப்பர் தந்த எச்சில் மாமிசத்துண்டு, சிவபிரானுக்குப் புதிய அமிர்தம் போலிருந்தது. இவைகளுக்கெல்லாம் காரணம் எது? அன்புதான்.

ஒளவையார் ஒரு சமயம் நடந்து பலவூர்களுக்குச் சென்று அறவுரை பகர்ந்து வந்தனர். அக்காலத்தில இந்நாளில் உள்ள வாகன வசதிகள் இல்லை. அதனால் தமிழ் அன்னையாகிய ஒளவையார் காலால் நடந்தே ஆங்காங்கு சென்று அரிய பணிகள் பல புரிந்துவந்தனர்.

ஒரு நாள் பகலெல்லாம் நடந்தனர். பொழுது சாய்ந்தது. கால்கள் தடுமாறின; கடும்பசி. இருள் சூழ்ந்துவிட்டது. எங்கு போவதென்று அம்மையாருக்கு விளங்கவில்லை.

தற்செயலாக எதிரில் ஒரு குடிசை இருந்தது; புல்வேளூர் என்ற ஊர்புறத்தே அக்குடிசை இருந்தது; அதில் பூதன் என்ஒருவ விவசாயி இருந்தான். நல்ல பண்புடையவன்; விருந்தினரை உபசரிப்பதில் வல்லவன். கருணையால் கனிந்த உள்ளமுடையவன். அவனுடைய வாழ்க்கைத் துணைவியான மனைவியும் அவ்வண்ணமே அறப்பண்புடையவள்; கணவனின் கருத்தறிந்து நடப்பவள்.

ஒளவையார் அந்தக் குடிசையின் அருகே களைத்து நின்று 'முருகா' என்று ஒரு பெருமூச்சு விட்டனர்.

### கிருபானந்தவாரியார்

குடிசைக்குள்ளிருந்த பூதன் என்பான் முருகா! என்ற குரலைக்கேட்டு விளக்கையேற்றிக் கொண்டு வெளியே வந்துபார்த்தான். பழுத்த பழமாக ஒரு கிழவி இருப்பதைக் கண்டான். ஒளவையாரென அவன் அறிந்தானில்லை; ''பாட்டி! தாங்கள் பசித்திருக்கிறாப் போல் தோன்றுகிறது, உள்ளே வந்து எம்மிடம் உள்ளதை உண்டு பசியாறுங்கள்'' என்று அன்புடன் அழைத்தான்.

ஒளவையார் குடிசைக்குள் நுழைந்தார். கிழிந்த பாய் ஒன்றை அவருக்கு இட்டு அதில் அமருமாறு பூதனுடைய மனைவி உபசரித்தாள. கையலம்ப நீரும் தந்தாள். வாழையிலை இட்டாள். பகற்பொழுதில் சமைத்த வரகரிசி [illegible] படைத்தாள்! அது விறகு போல் [illegible] இருந்தது.

''தாயே! நாங்கள் பரம ஏழைகள்; எங்கள் வீட்டில் பாலோ, தேனோ, பழமோ உயர்ந்த பிற உணவோ இல்லை. இந்த வரகரிசிச் சோறுதான் இருக்கின்றது. இதனை உண்டு பழகியிருக்க மாட்டீர்கள்'' என்று அந்த வீட்டரசி இனிமையாகக்கூறினாள்.

ஒளவையார் ''குழந்தாய்! வீடு தீப்பிடித்து எரியுமானால் பன்னீர் விட்டுத்தான் அணைக்கவேண்டுமா? தண்ணீர் விட்டால் தீ அணையாதா அதுபோல் வயிற்றில் எழுகின்ற பசித்தீ, பாதாம் அல்வாவினால்தான் அணையுமா? பழங்கஞ்சி உண்டாலும் அணையுந்தானே. ஆகவே, ஏதாவது தாருங்கள்'' என்றார்.

இலையில் படைத்த வரகரிசிச் சோற்றில், மூன்று நாட்களுக்கு முன் கடைந்து நுரையுடன் புளித்து இருக்கின்ற மோரை விடுத்தாள்.

துணைக்கறி யாதொன்றும் இல்லை. வீட்டம்மை என் செய்வோம் என்று கருதினாள். நீலமான கத்தரிக்காய்க்கு வழுதுணங்காய் என்று பேர். தோட்டத்திலிருந்து இரண்டு வழுதுணங்காய்களைப பறித்து அடுப்பில் நன்குகனைந்துள்ள நெருப்பில் இட்டுவாட்டினாள. வாட்டியவற்றை ஒரு பாத்திரத்தில் இட்டு தூய மெல்லிய கரமலரால் பிசைந்தாள். சிறிது உப்பிட்டு அரை எலுமிச்சம் பழம் பிழிந்து, ஈர வெங்காயத்தைச் சிறிது நறுக்கி இட்டாள். பச்சைமிளகாய் ஒன்று நசுக்கியிட்டாள். சிறிது காயத்தையும் கரைத்தாள். கரண்டியில் சிறிது நல்லெண்ணெயிட்டு கடுகும் கருவேப்பிலையும் உளுத்தம் பருப்பும் இட்டுத் தாளிதஞ்செய்து அதில் கலந்து பச்சைக் கொத்தமல்லித் தழையையும் அதில் இட்டு விரவினாள்.

இப்படிச் சில விநாடிக்குள் தயாரித்த அக்கறியை ஒளவையார் இலையில் சூடாகப் படைத்தாள். பூதன் அருகில் நின்று கிழிந்த பனை ஓலை விசிறியால் விசிறினான். ''எங்கள் புண்ணியப்பயனால் வந்த தண்ணருள் நிறைந்த தாயே! தங்கள் வரவினால் நாங்கள் புனிதர்களாக ஆனோம். நாங்கள் பெருந்தவமுடையோம். தங்கள் நல்வரவு தாங்கள் உண்டது கோடிபேர் உண்டதாகும். தங்களைக் கண்டகண்கள் நல்லகண்கள்; எங்கள் குடிசை என்ன மாதவஞ்செய்ததோ'' என்றான்.

பூதன் மனைவி, ''பாட்டி! இந்த புல்லிய உணவைத் தங்களுக்குப் படைத்ததற்கு உள்ளம் நாணுகிறது. தங்களைப் பாாத்தால் மிகப் பெரிய தகுதியுடையவர் என்று தெரிகிறது. தங்கள் திருமுகத்தில் ஞான ஒளி வீசுகின்றது. தங்களுக்குப் பாலும் தேனும் பழமும் சீனியும் படைக்க வேணும். நாங்கள் வறியவர்கள். எங்கள் வீட்டில் இவைகள்தான் இருந்தன. சோறும் வரகரிசி; மோரும் புளித்தது; உயர்ந்த கறிகளும் இல்லை. என்னமோ நீங்கள இவற்றை ஏற்றுக் கொண்டு உண்பதுவே நாங்கள் செய்த தவம்'' என்றாள்.

பாட்டிக்கு உபசரிப்பு.

இப்படிக் கணவனும் மனைவியும் இன்னுரை கூறிப்

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கேள்வி பதில் தணிக்கை

செல்வி: புவனநாயகி செல்வநாயகம்,
நொச்சிமோட்டை.

கே: தமிழினத்துக்கு உரிமைகள் வழங்கப்படுவதை எதிர்ப்பதில் சிங்களக் கட்சிகள் அனைத்தும் ஒன்றுதிரண்டு விடுகின்றனவாம்—எதற்காக?

ப: உங்கள் கேள்வியிலேயே பதிலும் இருக்கின்றதே — சிங்களக் கட்சிகள் இணைவது தமிழர்களுக்கு உரிமை கிடையாமல் தடுப்பதற்காக!

கே: அண்ணன் அமிர்தலிங்கத்தை பாராளுமன்றம் அனுப்பாத வட்டுக்கோட்டைப் பகுதி மக்கள் தியாகராஜாவை அனுப்பினார்களே அவர் இப்போது அம்மாவின் ஆட்சிக்குள் புகுந்ததும் வட்டுக்கோட்டை பகுதி மக்களின் இப்போதைய நிலை என்ன?

ப: துரோகிக்கு துணைபோனதை எண்ணி எண்ணி இப்போது கொதித்துப்போய் இருக்கிறார்கள்!

ஃ

எம். பொன்னுச்சாமி,
கல்லடி, மட்டக்களப்பு.

கே: மட்டக்களப்பு 2வது பா. உ. சென்ற பொதுத் தேர்தலில் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் அதாவது கல்லடியில் கந்தசாமி ஆசிரியர் அவர்களின் வளவிற்குள் க. கதிர்காமத்தம்பி அவர்களின் தலைமையின் கீழ் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் வேலூர்க் கொலனியிலுள்ள, காளி அம்மன் ஆலயத்திற்குரிய பூமிக்கும். குடியேற்றத் திட்டத்திற்கும் தான் இம்முறை எம். பியாகப் போனால் ஒரு மாத காலத்திற்குள் உத்தரவுப் பத்திரம் எடுத்துத் தருவதாக வீரமுழக்கம் செய்தார் ஆனால் பாராளுமன்றம் தொடங்கியும் ஒரு வருடமாகின்றது: இன்னும் மேற்குறிப்பிட்ட ஆலயத்திற்கும், குடியேற்றத் திட்டத்திற்கும் உத்தரவுப் பத்திரம் வழங்கவில்லை. இந்த 2வது பா. உ. வின் முட்டாள்தனத்தைப் பற்றி தங்களுடைய அபிப்பிராயம் என்ன?

ப: இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? கொடுத்த தேர்தல் வாக்குறுதி எதையாவது அவர் காப்பாற்றினால் அதுதான் ஆச்சரியம்!

ஃ

க. தங்கராசா,
ருகம.

கே: மதுவிலக்குப் பிரச்சினையில் கருணாநிதிக்கும் எம். ஜி. ஆருக்கும் மோதல் ஏற்பட்டுள்ளதாகவும் இருவரும் பிரியப் போவதாகவும் 'சிந்தாமணி' எழுதியிருக்கிறதே இது உண்மையா!

ப: பச்சைப்பொய் — சிந்தாமணி—தினபதிக் கூட்டம் கட்டிவிட்ட கயமைக் கதை இது. எம். ஜி. ஆருக்கும் கருணாநிதிக்கும் மதுவிலக்குப் பிரச்சினையில் மட்டுமல்ல—வேறு எந்தப் பிரச்சினையிலுமே கருத்து வேறுபாடு கிடையாது. இங்கு தமிழரசுக் கட்சிக்குள் சிண்டு மூடிய முனைவதுபோலவே, தினபதியார் தமிழ் நாட்டு அரசியலிலும் தி. மு. க. வை பிளவுபடுத்த முயற்சித்து வருகிறார்: அவரது இந்த முயற்சி இதுவே முதல் தடவையல்ல.

1 அண்ணா மறைந்தவுடன் கருணாநிதிக்கும் நெடுஞ்செழியனுக்குமிடையே லடாய் மூட்டிவிடப் பார்த்தார்;

2 கருணாநிதி கழகத் தலைவரானவுடன், அண்ணா கட்டிக்காத்து வந்த பாரம்பரியத்தை தி. மு. க. மீறிவிட்டதாகவும், பெரியார் இருக்கும் போது தி. மு: கழகத் தலைவராக கருணாநிதி எப்படி வரலாம் என்றும ஒரு பிரச்சினையைக் கிளப்பி கழகத்துள் பூசலை ஏற்படுத்த முயற்சித்தார்!

3 தமிழர் தலைவர் கருணாநிதியை ஈழத்துத் தமிழ்த் துரோகி ஒருவருடன் ஒப்பிட்டு, கருணாநிதியின் பெருமைக்கு இழுக்கு ஏற்படுத்த முயன்றார்!

4 எம். ஜி. ஆரின் திரைப் படங்களும், தென்னாட்டு தி. மு.க. ஏடுகளும் இலங்கைக்கு வராமல் தடுக்க வேண்டுமென்று தீவிர பிரசாரம் செய்துவருகிறார்:

5 அண்மையில் நடைபெற்ற தமிழகப் பொதுத் தேர்தலில் சிண்டிக்கேட் வெற்றிபெறும் என்று நம்பி 'சோவின்' புளக்கும் கையுமாக காத்திருந்து இறுதியில் ஏமாந்தார்.

6 இப்போது, மதுவிலக்கு பிரச்சினையில் கருணாநிதிக்கும் எம்: ஜி. ஆருக்கும் தகராறு ஏற்பட்டு கழகத்திலிருந்து எம். ஜி. ஆர். பிரிந்துவிடாரா என்ற நப்பாசையில் கதை கட்ட தொடங்கி இருக்கிறார் தினபதியார்+சிந்தாமணியார்!

ஃ

தி. இளங்கோ,
யாழ்ப்பாணம்.

கே: பாண்டிச்சேரி முதலமைச்சர் பருக்கிமரைக் காயரைப்பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: மதத்தால் இஸ்லாமியராக இருந்தாலும் மொழியால் முழுத்தமிழர்! கலைஞரின் அன்புத்தம்பி!

கே: அரசாங்க சேவையிலுள்ளவர்கள் உங்கள் தமிழியக்கத்தில் சேரலாமா?

ப: தமிழியக்கத்தில் தமிழர்கள் யாரும் சேரலாம். அவரவர்களுக்கு ஏற்றபணி தரப்படும்!

பொ. கலைச்செல்வி,
ஏழாலை.

கே: திரு. வி. பொன்னம்பலம் சிங்களத் தலைவர்களோடு கொண்டிருக்கும் உறவு தோழர் என்ற முறையிலா அல்லது அடிமை என்ற முறையிலா அமைந்துள்ளது?

ப: கம்யூனிஸ்ட் என்ற முறையில் 'தோழர்' தமிழன் என்ற முறையில் 'அடிமை!'

கே: திரு. வி. பொன்னம்பலம் உண்மையான ஒரு கம்யூனிஸவாதியா?

ப: உண்மையான கம்யூனிஸ்டுகள் 'சீதனம்' என்னும் 'முதலாளித்துவ' முறையை எதிர்ப்பவர்களாயிற்றே......!

கே: இலங்கையில் எப்பொழுது உண்மையான ஒரு சோசலிச அரசு அமையும்?

ப: இரு இனங்களும் சமத்துவமாக வாழும் சமஷ்டி அரசு அமைந்த பின்னர்!

கே: தினபதியார் ஒரேயடியாக விழுந்துவிட்டாராமே!

ப: கெட்டிக்காரன் புழுகே எட்டு நாள் நிலைக்கும் போது தினபதியார் எம்மாத்திரம்?

ஃ

எம். ஏ. ரஹீம்,
மாத்தளை.

## கேள்வி பதில் தணிக்கை

கே: வெளிநாட்டுக்குப் போய்வராத மந்திரியாரும் உண்டா?

ப: குமாரசூரியர் இருக்கிறாரே!

ஃ

சொல்லின் செல்வன்,
கொட்டடி.

கே: நாடாளுமன்றத்தில் சி. எக்ஸ். மாட்டினின் குரல் ஒலிப்பதில்லையே, காரணம் என்னவோ?

ப: பேச்சை விட செயல் முக்கியம் என்று அவர் கருதுகிறாரோ என்னவோ?

கே: யாழ் நகர முதல்வர் தெருவெல்லாம் தகரடப்பா அடுக்கியுள்ளாரே...?

ப: அப்படியா? அவரே ஒரு தகரடப்பா என்பதை யாழ்நகர் விரைவில் உணர்ந்துவிடும்!

கே: ஈழத்திலும் காங்கிரஸ் இரண்டாமே...?

ப: அப்படித்தான் அருளம்பலம் கூறுகிறார் (1) நிராகரிக்கப்பட்ட காங்கிரஸ் (2) தெரிவு செய்யப்பட்ட காங்கிரஸ், என இரண்டாக தமது கட்சி உடைந்து விட்டதாக அருளம்பலம் கூறியிருக்கிறார்! இதில் பொன்னம்பலம்' நிராகரிக்கப்பட்ட காங்கிரசின் தலைவர்! அருளம்பலம், தெரிவுசெய்யப்பட்ட காங்கிரசின் தலைவர்!

கே: கருணாநிதி கேட்கும் மாநில சுயாட்சியும் தமிழரசார் கேட்கும் மாநில சுயாட்சியும் ஒரு தன்மையானது தானா?

ப: ஆமாம்!

---

## குட்டிக்கதை

# ஆராய்ச்சி!

அமானுஷ்யமான இருள்கப்பிய அழுக்கமான மூச்சுமுட்டும் காடு பார்த்த இடமெல்லாம் செடிகள் அடர்ந்த புதர்கள்; பூதாகரமான குகைகள்; பறவைகளும், விலங்குகளும் நிர்ப்பயமாய் வாழத் தக்க சூழலையுடைய உறைவிடம்.

அந்த வனத்திலே கின்னாட்களாக இருந்தாற் போலிருந்து புதிய இராகத்திலே நாத இசை எழுந்துகொண்டிருந்தது. தென்றலிலே தவழ்ந்து அலையெழுப்பும் அந்த நாத வெள்ளத்திலே பறவைகளும் மிருகங்களும் மூழ்கிததிளைத்தன. தன்னுணர்வற்று மயங்கின. அவ்விசையின் காரணி எதுவென்றறிவதிலே அவைகளின் சிந்தனை மழுங்கிற்று.

இருப்பினும் அவைகளின் மத்தியிலே காட்டுத் தியாகப் பரவிக் கொண்டிருந்தது ஒரு வதந்தி 'இருமரங்கள் தங்களுக்குள்ளே பேசிக்கொள்கின்றன' என்று!

ஆயின், அவ்வதந்தியில் உண்மையிருக்குமென்பதில் மிருகங்களும் பறவைகளும் மறுத்தன திரித்துக் கூறப்படும் ஒரு கற்பனை என்று வாதாடின.

என்றாலும், மனிதன் தான் எண்ணிய கருத்துக்களை வெளியிடும் ஆற்றல் படைத்தவனாக இருப்பினும், அவனுக்கடுத்ததாகப் பேசும் ஆற்றல் படைத்தவர்கள் நாம் தானே, அப்படி இருக்க மரம் பேசுகின்றது என்ற சமாச்சாரத்தை என்றாவது நாம் கேள்விப்பட்டதுண்டா? இது ஆராய்ந்து முடிவு கட்டவேண்டிய கருமம்.

இவ்வாறு தங்களுக்கிடையே கலந்துரையாடிக்கொண்டிருந்த மிருகங்களும், பறவைகளும், அம்மரத்தைப் பற்றிய பூர்வோத்திரங்களையும், இயல்பு மாற்றத்தின் காரணிகளையும் பரிணம வளர்ச்சியின் ஏதுக்களையும், அணு அணுவாகத் துருவி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஐவரைக் கொண்ட ஒரு குழுவை நியமித்தன.

உண்மையாகவே மரம் பேசுகின்றது என்று கண்டு பிடிக்கப்பட்டால், நாம் மூன்றாந்தரத்திற்குக் கூட ஒதுக்கப்படலாம்; அந்த அவமானத்தால் நம் அந்தஸ்தை இழந்து விடாமலிருக்க அம்மரத்தைத் தீ வைத்துக் கரித்துச் சாம்பலாக்கிவிட வேண்டும்' என்றும் ஏகமானதாகத் தீர்மானித்தன.

குழுவிலே அங்கம்பெற்ற ஐந்தும், தங்களுக்குக் கிடைத்த பதவி குறித்து பெருமைப் பட்டன. தேனில் மொய்த்த ஈயாக மயங்கின. பாரிய வித்தகர்கள் என்று காட்டிக் கொண்டன. தங்கள் ஆராய்ச்சியில் கிடைக்கும் வெற்றியின்பின், கிடைக்கவிருக்கும் வரவேற்பைப் பற்றியும், விருதுகளைப் பற்றியும், சன்மானங்களைப் பற்றியும், விளம்பரங்களைப் பற்றியும் கனவு கண்டன. தங்கள் முடிவை ஏனைய மிருகங்களெல்லாம் கண்களை மூடிக்கொண்டு [illegible] கொள்ளும் என்றும் [illegible]

பின். தங்களுக்குத்தேவையான சாதனங்களை எடுத்துக்கொண்டு பிரியாவிடை பெற்று வனத்திலேஇறங்கி விட்டன.

ஆராய்ச்சிக் குழுவிற்கு இரு வாரங்கள் கொடுத்திருந்தும், அவசர அவசரமாக தங்கள் கருத்திலே கண்ணாயிருந்து உழைத்தபடியாலும், துரித நடவடிக்கையினாலும், ஒரு வாரத்துள் மரத்தைப் பற்றிய விரிவான நீண்ட அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தன.

**எம். ஐ. எம். மஷ்ஹூர்**

அதன் சுருக்கம் 'நெடிதுயர்ந்த இருமரங்கள் அருகருகே கணவன் மனைவியாய் நெருங்கி இருக்கின்றன. விளங்கமுடியாத மொழியில் காதற் கதை பேசுகின்றன. இசை எழுப்புகின்றன' — இவ்வாறு இருந்தது.

அம் மரத்தை எரித்து அழிப்பதற்கு முன்னால் அவ்வற்புதக் காட்சியைக் கண்ணாரக் கண்டுகளிக்க வேண்டுமென்று பறவைகளும் மிருகங்களும் அவாக் கொண்டன. ஆராய்ச்சிக்குழு முன்னே வழிகாட்டிச் செல்ல, ஏனைய மிருகங்களும் பறவைகளும் சென்று அம்மரத்தைச் சூழ்ந்து கொண்டன.

[illegible] இரைச்சலோடு புயலாக வீசியது காற்று. இணைந்திருந்த இருமரங்களும் ஒன்றோடொன்று உராய்ந்து இசைவெள்ளம் பாய்ச்சிக் கொண்டிருந்ததைப் பார்த்தபோது பறவைகளும் மிருகங்களும் கைக்கொட்டிச் சிரித்தன. ஆராய்ச்சிக்குழுவை ஏளனமாகப் பார்த்தன.

''உண்மையைச் சரிவர விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி நாம் உங்களைப் பணித்தோம். உண்மையை திரித்துக்கூறி எம்மை ஏமாற்றியதற்கு மரண தண்டனை விதித்தாலும் தகும். உங்கள் அறிக்கையில் அறிவிழந்து அம்மரத்திற்குத் தீ வைக்கும் திருப்பணியை உங்களிடம் ஒப்படைத்திருந்தோமாகில், இந்நேரம் வசிக்க இடமின்றி அல்லோல கல்லோலப் படுமளவு இவ்வனத்தேயே சுடுகாடாக்கியிருப்பீர்கள். எந்த ஒரு காரியத்தைச் செய்யவும் அதற்குத் தகுதியானவர்களை நியமிக்காத பட்சத்தில் குறிப்பிட்ட பலனின்றி ஏமாற்றமே முடிவாகக் கிடைக்கும். இல்லாவிட்டால் குழுவை மேற்பார்வையிட இன்னுமொரு குழு நியமிக்கப்படாவிட்டால் எல்லாம் விபரீதமாகவே முடியும். நம் குழுவின் முடிவைச் சரியெனக் கண்டிருந்தோமாகில் நம் கதி என்ன!

இவ்வாறு அவைகள் பேசிக்கொண்டே பிரிந்து சென்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவாழ்வு

**தூக்குமேடை!**

கேலிச் சிரிப்புடன் காட்டினர்; கிஞ்சித்தும் கவலை கொண்டதில்லை அம்மாவீரர்கள்; துணிவோடு ஏறினர், அவர்கள் கண்களிலே புது ஆவேசம் பிறந்தது. தூக்கு, அவர்களது உயிரைப் போக்கிற்று. பிணமாயினர்—ஆனால் அவர்களது புகழ்மணம், மறையவில்லை; மாறாக எங்கும் வீசலாயிற்று.

**சித்திரவதை!**

அவர்கள் சிந்தையைக் குலைக்கவில்லை. சிறிதும் தயங்கவில்லை. 'ஆதெல்லாம் வரும்' என்று எதிர்பார்த்ததுபோல, அவர்கள் கண்களிலே புது ஒளி கிளம்பிற்றே தவிர, நீர் எழும்பவில்லை.

**துப்பாக்கிகள்!**

கர்ஜித்ததுண்டு, பலமுறை. ஆனால், குலைந்து போனதில்லை, அந்த வெற்றிச்செல்வர்கள். வீரம், அவர்கள இதயத்திலே விளையாடிற்று. மயங்கியதில்லை, தயங்கியதில்லை; மார்பைக் காட்டினர்.

**தடியடி!**

எத்தனையோ தடவைகள், அவர்கள் தலைகளை உடைத்ததுண்டு, கால் கைகளை ஒடித்ததுண்டு. இரத்தத்தை கீழே ஓடச் செய்ததுண்டு.

நச்சுக் கொப்பைகள் ஒரு சமயம்! தீச்சுழல் வேறொரு நேரம்! சாட்டையடி, இன்னொரு வேளை! உயிரோடு சாவுக் குழியில் தள்ளப்பட்ட கோரம், மற்றொரு நேரம்! மக்கள் வாழ்க்கையைச் செப்பனிடுவதற்காகக் கிளம்பியோர் பெற்ற, கொடுமைகளும், தீங்கும், பலப்பல. காலத்துக்கும் நேரத்துக்கும் ஏற்றபடி, அவர்கள் உடலையும் உள்ளத்தையும், ஆள்வோரும், அவர்தம் கொள்கைகளை வெறுத்தோரும் செய்தகொடுமைகள் ஒன்று, இரண்டல்ல!

சமுதாய சீரமைப்புக்காக, சுயவாழ்வை ஒதுக்கி, பொதுவாழ்விலீடுபட்ட அப்போர் வீரர்கள், ஆங்காங்கு அனுபவித்த, கொடுமைகள்—உலக வரலாற்றைப் பார்ப்போரின் உள்ளங்களைக் குலுக்கும்.

அவ்வளவு வேதனைகள் அவ்வீரர்களுக்கேற்பட்டதுண்டு. 'அரசாங்கம்' என்பதன் மீது அமர்ந்தோர், ஒரு சமயம், அம் மாவீரர்களின் எதிரிகளாயிருப்பர். இன்னொரு சமயம், அம் மாவீரரின் பேச்சும் செயலும் பிடிக்காதோர், விரோதிகளாயிருப்பர்.

மத மடங்கள் ஒருநேரம் பாயும்! பணபீடங்கள் இன்னொரு நேரம் உறுமும்! அரசு அதிகாரம், மற்றொரு சமயம் தூக்குமேடை—துப்பாக்கி—தடியடி, ஆகியவைகளைக் காட்டி கர்ஜிக்கும்!

ஆனால், இவையெல்லாம் கண்டு, பொதுமக்களுக்காக உழைக்க முற்பட்டோர் கலங்கியதில்லை—விரண்டோடியதுமில்லை.

சரியென்று நினைத்தமைக்காகப் போராட சாவு, தடுத்ததில்லை அவர்களை; அதற்காகப் போராடி, சாவதே, தமது வீரத்துக்குக் கிடைக்கும் விருது, என்று அவர்கள் கருதியதால்.

ஃ ஃ ஃ

பசிக்கொடுமை தாங்க முடியவில்லை—உணவில்லாததால் உலர்ந்த சருகுபோலானாள் மனைவி. அவளது கண்களோ, கீழே செத்துக்கிடக்கும் குழந்தையை, கண்ணீரால் கழுவிக் கொண்டிருக்கின்றன; அவனோ அருகே உள்ள மேஜையின் மீது அமர்ந்து எழுதுகிறான், கடிதம்—தனது நண்பனுக்கு:

''பாலில்லை—எனினும் பசி தாங்காமல் என் குழந்தை, தாயின் மார்பைச் சப்புகிறது. பாலிருந்தாலன்றோ வர! ஆனால் குழந்தை அதை, எப்படி அறியும்; ஆவலோடு, சப்புகிறது; பாலுக்குப் பதில் வரண்டுபோன என் மனைவி



அமரர் அண்ணா

யின் மார்பிலிருந்து இரத்தம் வடிகிறது. அதையும் விடவில்லை, என் குழந்தை: குடித்தது—செத்தது! எவ்வளவு கொடுமை, நான் என்ன செய்வேன், ஏங்கெல்ஸ். அருமை நண்பா, ஆறுதலயரோடு நிற்கும் மனைவியின் கண்ணீர் என்னைச் சுடுகிறது. துடிக்கிறாள் அவள். நானென்ன செய்வேன்?''

உலகின் பேரறிஞனும் காரல் மார்க்ஸ், பட்ட கஷ்டங்களிலே ஒரு காட்சி இது.

இதுபோல, மக்கள் வாழ்வைப் பெரிதென மதித்து, தம்மை அதற்கு அர்ப்பணித்த வீராதி வீரர்களின் குடும்பங்களெல்லாம், வேதனையில் மூழ்கியவைதான்.

பட்டினிக் கொடுமையும் பணத்தொல்லையும், மாற்றார் தூற்றலும், அவர்களைச் சுற்றி வளைத்துக் கிடந்ததுண்டு.

ஒரு பக்கம், தனது கொள்கைகளை எதிர்ப்போரும் மறுப்போரும் விரோதிகளாயிருப்பர்!

இன்னொரு பக்கம், குடும்பத்தில் புயல் வீசும்!

இரு கொள்ளி எறும்பு போல் தத்தளித்தாலும், இலட்சிய வீரர்கள், ஏங்கியதில்லை அவைகளை நினைத்து.

மனைவியின் 'ஐயோ' என்ற அழுகுரல், மக்கள் எழுப்பும் 'வாழ்க' என்ற முழக்கத்தால், மறைந்து விடும், பட்டினிக் கொடுமை, மக்கள் தன்னை ஆதரிக்கின்றனர் என்ற மகிழ்ச்சி முன் சிறு துரும்பாகிவிடும்.

ஃ ஃ ஃ

பொதுவாழ்வு—ஒரு சிலந்திக் கூடு. ஆனாலும், அதிலீடுபட்டோர், தளர்வதுமில்லை; அயர்வதுமில்லை.

உலகத்தை உற்றுப் பார்த்து, அதன் வேதனை தாங்காது, அவைகளை ஒழித்து, நல்வாழ்வு காண வேண்டும் என்ற ஒரே எண்ணம், அவர்கள் உள்ளத்தில் குடியேறி விடுவதால், அந்த எண்ணமே, அவர்களோடு பிணைந்துவிடுகிறது.

பரந்து விரிந்து கிடக்கும் மக்கள் கூட்டத்தில் தாங்களும் ஒரு துளியாக, தங்கள் காலத்தைத் தள்ளி விட்டுப் போவது என்பது—கஷ்டமானதல்ல.

ஆனால், இலட்சிய வீரர்களோ, தம்மைப்பற்றி நினைப்பது இல்லை. நினைப்பதே தவறு, சமுதாயத்தை நினைத்து, பிறகு தன்னை நினைக்க வேண்டுமென்பது அவர்கள் சித்தாந்தமாகி விடுகிறது.

பொதுவாழ்வு மகிழ்ச்சி தரும் பூம் மலர்த் தோட்டமல்ல; கொளுத்தும் வெய்யிலும், குமுறி வீசும் காற்றும், நிரம்பிய பாலைவனம்.

இது, அவர்களுக்கு, நன்றாகத் தெரியும். ஆனாலும், ஈடுபடுகிறார்கள்—தொல்லைகளைப் பெரிதென மதியாது!

இலட்சிய வெறி கொண்டோர் இதுவரை ஆளாகியிருக்கும் கொடுமைப் பட்டியலைப்பார்த்தால், மிகப் பெரிதாகும்.

தமது வாழ்வை பொருட்படுத்தாது, சமுதாயக் கூட்டமைப்பையே, பெரிதென எண்ணி, அதன் சுழற்சிக்குப் பலியானோர் பல்லாயிரக் கணக்கில் உண்டு.

கிளியைத் துரத்துகிறது பூனை, கதறுகிறது அப்பைங்கிளி! அதைக் காப்பாற்றுவது, மிகவும் முக்கியம்.

தன்னைக் காப்பாற்ற வருவோரைக் கண்டு கிளி மகிழும்—ஆனால் பூனை? கோர நகங்களால், பிறாண்டாமல் விடாதே!

இதைப் போலத்தான், சமுதாயக் கேடுகளைப் போக்கும் எண்ணத்தோடு, ஈடுபடுவோர் பெறும் பலனும்.

ஃ ஃ ஃ

போக போக்கியங்களிலே புரளுவோரானாலும், குடிசைக்குள்ளே கொந்தளிக்கும் குடும்பத்தைப் பெற்றோரானாலும், பொதுவாழ்விலே ஈடுபட்டுவிட்டால், அவர்கள் ஒரே வரிசையில் தான் நிற்பார்கள்.

பணம் படைத்தவன், தனது பணிக்காக, அதிகப்படலனை எதிர்பார்ப்பதும், தன் குரலுக்குச் செல்வாக்கு ஏற்படவேண்டுமென நினைப்பதும், வாழ முடியாத வறியோன் அவன், ஆகவே அவனுக்கு உரியது கொஞ்சம் பலன்தான், எனவே அவன் பேச்சுஎடுபடவில்லை என்பதுமான, வித்தியாசம் பொதுப்பணி கொண்டோரிடையிலே உலவாது.

ஃ ஃ ஃ

கிளியை பூனையிடமிருந்து விடுவித்துப் பறக்க விட வேண்டும் என்று எண்ணுவோரும், உண்டு;

அதே நேரத்தில், பூனையிடமிருந்து கைப்பற்றி தன் வீட்டில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று முனைவோரும் உண்டு.

இருவரும், கிளியை விடுவிக்கப் போராடினாலும், முதல் நபரே உண்மையுள்ளமும், நல்லெண்ணமும் கொண்டவரென மதிப்புப் பெறுவார்.

'எனது பணியும் கிளியை விடுவிப்பதுதானே' என்று, வீட்டிற்கு விடுபட்ட கிளியைக் கொண்டுபோக எண்ணுபவன் கூறினால் அதை எவரும் ஒப்பார்!

''துரோகி''

''பொதுப் பணியின் பேரால், தன் வாழ்வை வளமாக்க நினைப்பவன்''

சுதந்திரம் தரப்போவதாகச் சென்று, கிளியைத் தன் மகிழ்ச்சிக்காக எடுத்துக்கொண்டவன்'' என்ற பழியே பரிசாகக்கிடைக்கும்.

பொதுப்பணி என்ற பெயரால் தான் பெற்ற செல்வாக்கை, பணப்பெட்டியை நிரப்பும் வழியாக உபயோகிப்பவன், மக்களால் வெறுக்கப்படுவான்; அவன் எவ்வளவு அருமையான கொள்கைகளைக் கூறினாலும் அது செம்பாகுமே தவிர, பொன்னாக மதிக்கப்படமாட்டாது.

(11-ம் பக்கம் பார்க்க)

# கருணாநிதி தலையணையின் கீழ் கருநாகம் இருந்தது!

கலைஞர் கருணாநிதியின் தலையணையின்கீழ் கருநாகம் ஒன்று சுருண்டுபடுத்திருந்ததாம்—இத்தகவலைக் கலைஞர் கருணாநிதியே சென்னை ராபின்சன் பூங்காவில் அண்ணா சிலையை திறந்துவைத்துப் பேசியபோது வெளியிட்டார்.

அப்போது அவர் கூறியதாவது:—


இந்தப் பூங்காவில் கழகம் ஆரம்பிக்கப்பட்ட இந்த நாளில் சேலத்திலிருந்து வந்து அந்த விழாவில் நான் கலந்துகொண்டேன்.

சென்னைக்கு வந்தால நான் வழக்கமாகத் தங்குகிற இடம் பிரசித்திபெற்ற எவரெஸ்ட் ஓட்டல் அல்ல!

அதற்கு எதிரேயுள்ள விருதுநகர் நாடார் ஓட்டலில் தான் வழக்கமாகத் தங்குவேன்.

நாடார்களுக்கும் எனக்கும் இன்று நேற்றல்ல; 1949 ஆண்டிற்கு முன்பிருந்தே தொடர்புண்டு என்பதைச் சுட்டிக் காட்டத்தான் இதைக் குறிப்பிடுகிறேன்.

அந்தக் கூட்டத்தைக் காண்பதற்காக சேலத்திலிருந்து என்னோடு அருமை நண்பர் கண்ணதாசனும் வந்திருந்தார்.



இரவு 12 மணிக்கு கூட்டம் முடிந்து அண்ணாவோடும் கழக முன்னணி வீரர்களோடும் அளவளாவிக்கொண்டிருந்த நேரத்தில், தான் முன்னே போய் தூங்குவதாகச் சொல்லிவிட்டு என் அறைக்கு கண்ணதாசன் சென்று விட்டார்.

அண்ணா நண்பர்களோடு பேச ஆரம்பித்தால் விடிகிற வரை பேசிக்கொண்டிருப்பார் என்பது அவருடன் பழகியவர்களுக்குத் தெரியும்.

## அவரே கூறிய தகவல்!

கிட்டத்தட்ட இரவு 2 மணி அளவில் பேச்சுமுடிவுற்று, அறைக்கு வந்து படுக்கத் தொடங்கிய நேரத்தில், நல்லவேளையாக விளக்கைப் போட்டிருந்ததால் தலையணைக் கடியில் இருந்த கருநாகத்தைக் கண்டுபிடிக்க முடிந்தது.

விளக்கைப் போடாமல் அப்படியே படுத்திருந்தால் கருநாகம் கழுத்தில் தீண்டியிருக்கக்கூடும்.

கழகம் தொடங்கிய மறுநாளே என்னுடைய முடிவும் ஏற்பட்டிருக்கக்கூடும்.

ஆனால், அண்ணா அவர்கள் வளர்த்து வானுற ஓங்கச் செய்த கழகத்தை அவருக்குப் பிறகு என்னுடைய தலைமையிலும் நாவலரைப் போன்றவர்களுடைய தலைமையிலும் நடத்திச் செல்லவேண்டுமென்றிருக்கும்போது கருநாகம் கண்ணில் படாமல் இருக்குமா?

கண்ணில்பட்ட கருநாகத்தை அடித்துத் தூக்கியெறிந்துவிட்டு விடியும்வரை விழித்துக்கொண்டிருந்தோம்!

ஏனென்றால் கருநாகக் குட்டிகள் ஒன்றிரண்டு இருக்காது, பத்து பன்னிரெண்டு இருக்கும் என்று பக்கத்து அறைக்காரர் சொல்லிவிட்டு, அவர் போய் படுத்துக்கொண்டார்.

ஆகவே மிச்சமுள்ள கருநாகங்கள் எப்போது வருமோ என்கிற அச்சத்தோடு, இரவெல்லாம் விழித்திருந்து காலையில் புறப்பட்டு சேலத்திற்குச் சென்றோம்.

ஏன் இதைச் சொல்கிறேனென்றால், கருநாகத்தை அடித்துமுடித்துவிட்டாலும் இனிமேல் வருமோ என்பதற்காக எப்படித் தூங்காமல் விழித்திருந்தோமோ அதைப் போலத்தான் இந்தத் தேர்தலில் நாம் காங்கிரசை வீழ்த்திவிட்டோம் என்கிற வெற்றிக்களிப்பில் இருந்தாலும் கொஞ்சம் விழிப்போடு இருக்கவேண்டும்!

ஒன்றிரண்டு ஒளிந்திருந்து வந்தாலும் வரும்.

நாங்கள் அப்போது தூங்காமல் இருந்ததைப் போல் [illegible] மல் இருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வங்க விடுதலைப் போர் வளர்ந்த வரலாறு (5)

# பாகிஸ்தான் அரசியலில் 'அவாமிலீக்' வளர்ந்த கதை!

'முரசொலி' மாறன் எம். ஏ. எம். பி.

வங்காளிகளிடையே கொழுந்து விட்டெரியும் மொழி உணர்ச்சியையும், மத்திய அரசாங்க ஆதிக்க எதிர்ப்பு உணர்ச்சியையும் பிரதிபலிக்கும் கண்ணுடியாகவும், அந்த எதிர்ப்பு உணர்ச்சிகளின் ஈட்டி முனையாகவும் அவாமி முஸ்லிம் லீக் கிழக்கு வங்கத்தில் உருவெடுத்தது.

''கிழக்குப் பகுதியும் மேற்குப் பகுதியும் பாகிஸ்தானின் இரண்டு இதயங்கள். இரண்டாக இருந்தாலும் அதன் துடிப்பு ஒன்ருகவே இருக்கும்''

—என்று ஒரு முறை லியாக்த் அலிகான் கூறியிருந்தார்.

ஒரு மொழித் திணிப்பின் விளைவாக இரு இதயங்களும் ஒன்ருகத் துடிக்கும் நிலை மாறி; வேறுபட்டுத் துடிக்கும் புதிய நிலை உருவாயிற்று!

அந்தப் புதிய துடிப்பின் உருவகமாகத்தான் கிழக்கு வங்கத்தில் அவாமி முஸ்லிம் லீக் கட்சி உருவாயிற்று.

சுரவர்த்தி போன்ற பெருந்தலைவர்கள் அக்கட்சியை அமைத்தனர்.

மொழிப் போராட்டத்திலே ஈடுபட்டு அப்போது சிறைச்சாலையிலே அடக்குமுறைக்கு ஆளாகிக்கொண்டிருந்த முஜிபுர் ரகுமான் அக்கட்சியின் கூட்டுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வங்க மொழிக்கு உரிய இடம் தரவேண்டும்;

கிழக்கு பாகிஸ்தானுக்கு மாநில சுயாட்சி கிடைக்க வேண்டும்:

—இவை இப்புதிய கட்சியின் இலட்சிய அடிப்படையாயின!

பட்டி தொட்டிகளிலெல்லாம் இக்கட்சி பாமர மக்களிடத்திலே புதிய இலட்சியத்தை வேகமாகப் பரப்பிற்று!

முதன் முதலாக ஒரு எதிர்க்கட்சி—அதுவும் தனது ஆதிக்கத்திற்கு எதிராக உருவாவதைத் தாங்கமாட்டாத மத்திய அரசு அடக்குமுறைக் கணைகளை ஏவிற்று!

கட்சித் தொண்டர்கள் அணி அணியாகக் கைது செய்யப்பட்டார்கள்!

தொண்டர்களைத் தாக்குவதற்குக் குண்டர்கள் ஏவப்பட்டார்கள்!

கல்லடி இல்லாமல் அவர்கள் கூட்டங்கள் நடைபெருத சூழ்நிலை உருவாயிற்று!

அடுத்த கட்டமாக அவர்கள் கூட்டங்களுக்கெல்லாம் தடை விதிக்கப்பட்டன!

மொழி உணர்ச்சி சாதி—மத—பேதங்களைக் கடந்தது அல்லவா?

எனவே வங்க மொழியை உயிரெனக் கருதிப் போற்றும் இந்துக்களும் இக்கட்சியில் தங்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொண்டனர்!

மத்திய அரசாங்கம் இதை வைத்துக்கொண்டு இக்கட்சி இந்திய ஏஜெண்டுகளின் கட்சி என்று கூறி வேகமாகப் பலமான அடக்குமுறைக் கணைகளை ஏவிற்று!

ஆனுல் இந்த அடக்குமுறை அக்கட்சியை அடக்குவதற்குப் பதிலாக வேகமாக வளர்ந்தது!

சிறைச்சாலை— சித்திரவதை போன்ற அடக்குமுறைகள் அக்கட்சியை இலட்சிய உரம் மிக்கத் தொண்டர்கள் நிரம்பிய பாசறையாக — சுடச்சுட ஒளிரும் பொன்னுக மாற்றியது!

இதற்கிடையில் முஜிபுர் ரகுமான் அக்கட்சியின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்!

வங்க மொழியைக் காப்பாற்றுவதில், வங்க பகுதிக்குச் சுயாட்சி கேட்பதில் அடக்குமுறைகளை எதிர்த்து நிற்பதில் இந்து—முஸ்லிம்—கிறித்துவர் என்கிற பேதமில்லாமல் 'அனைவரும் வங்காளிகளே!' — என்கிற பரந்த உணர்வு பரிமளிப்பதை ரகுமான் உணர்ந்தார்.

அவாமி முஸ்லிம் லீக் என்கிற கட்சியின் பெயரில் உள்ள முஸ்லிம் என்கிற சொல்லை எடுத்துவிட்டு, அவாமி லீக் என்று கட்சிப் பெயரை மாற்றியமைத்தார்.

**அவாமி என்ருல் மக்கள் என்று அர்த்தம்.**

மொழிக் கொள்கை; மாநில சுயாட்சிக்கொள்கை இவை தவிர இடதுசாரிப் பொருளாதாரக் கொள்கைகள் நிரம்பிய இயக்கமாகவும் அக்கட்சி உருவெடுத்தது.

தீவிர நிலச் சீர்திருத்தம்,

சணல் ஆலைகளை தேசியமயமாக்குதல்,

தேயிலைத் தோட்டங்களைத் தேசியமயமாக்குதல்,

—போன்ற இடதுசாரிப் பொருளாதாரத் திட்டங்கள் அவாமி (மக்கள்) கட்சியை அறிவாளிகள், தொழிலாளிகள், விவசாயிகள், சிறு வியாபாரிகள், நடுத்தர வர்க்கத்தவர்கள்—ஆகியோர் அங்கம் வகிக்கும் உண்மையான மக்கள் கட்சியாக மாற்றிற்று!

வங்க மொழுக்கனலில் சமுதாயத்தின் பல்வேறு தளங்களில் வசிக்கிற மக்களது வித்தியாசங்கள் வெளித் தெரியாமல் பொசுங்கி மறைந்தன.

'வெட்ட வெளியிலே நின்று கொண்டு எத்தனை நாள் வீராப்பு பேசப்போகிறீர்கள்? வாருங்கள் சட்ட சபைக்கு!'—என்கிற அறைகூவல் அங்கும் விடப்பட்டது!

முஜிபுர் ரகுமான் அந்த அறைகூவலை ஏற்ருர்!

எந்த மீனும் தப்பிச் செல்லாத வகையில் கூட்டணி என்கிற வலையைப் பின்னிஞர்!

அவாமி கட்சித் தலைமையில் இதர எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒன்று திரண்டன.

கிரிஷக் சம்ரிக் கட்சி, நிஜாம்-இ-இஸ்லாம் என்கிற கட்சி, கணதந்திரக் கட்சி போன்ற கட்சிகளும், கம்யூனிஸ்ட்டுகளும் அவாமி கட்சித் தலைமையில் தேர்தல் உடன்பாடு கொண்டனர்.

இதற்கு 'ஜுக்தா' என்று பெயர். இதன் பொருள் 'கூட்டணி' என்பதாகும்.

இந்தக் கூட்டணி 21 அம்சத் திட்டமொன்றைத் தயாரித்தது.

இந்த 21—அம்சத் திட்டத்தில் முக்கியமானவை இவை:

1. வங்க மொழியை உடனடியாக உருது மொழிக்குச் சமமாக ஆட்சி மொழியாக்க வேண்டும்.

2. பாதுகாப்பு, வெளி நாட்டுக் கொள்கை, நாணயச் செலாவணி தவிர்த்த இதர துறைகளில் கிழக்கு பாகிஸ்தானுக்குப் பூரண மாநில சுயாட்சி வழங்க வேண்டும்.

3. சணல் ஏற்றுமதி செய்வதில் கிழக்கு பாகிஸ்தானுக்கு மத்திய அரசின் தலையீடு இல்லாத சுதந்திரம் அளிக்கப்படவேண்டும்.

4. வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குவதில் மத்திய அரசு கிழக்கு பாகிஸ்தானைக் கலந்து பேசி முடிவெடுக்க வேண்டும்.

5. கிழக்கு பாகிஸ்தான் மேற்கு வங்கத்தோடு வியாபார உறவு கொள்வதில் உள்ள கட்டுப்பாடுகளையும், இந்தியா — பாகிஸ்தான் போய் வருதற்கும், விசா வழங்குவதற்கும் உள்ள கட்டுப்பாடுகளையும் நீக்க வேண்டும்.

—இந்தக் கூட்டணியை எலியும் தவளையும் செய்து கொண்ட ஒப்பந்தம் என்று அதிகார பீடத்தில் இருப்போர் கேலி செய்தனர்.

கூட்டணிக் கட்சிகளிடையே மலைக்கும் மடுவுக்குமுள்ள கொள்கை வேறுபாடுகள் இருந்தனவென்பது உண்மைதான்.

ஆனுல் வங்க மொழி உணர்ச்சியும், மாநில சுயாட்சிக் கொள்கையும் அக்கட்சிகளை இணைத்துப் பிணைக்கும் கயிருக இருந்தது.

நூருல் அமீன் — என்கிற கிழக்கு பாகிஸ்தான் முதலமைச்சர் (வங்க மொழியைக் காட்டிக் கொடுக்கும் துரோகி என்று இகழப்பட்டவர்) இந்தக் கூட்டணியைப் பொருட்படுத்தவேயில்லை.

1954—ம் ஆண்டு மார்ச் மாதம் எட்டாம் தேதி தேர்தல் வந்தது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் மொழிப் போராட்டத்தில் இருபத்தி ஆறு வங்காளிகள் [illegible] சிறைச்சாலை நிரம்பி வழிந்திருக்கின்றது; வங்காளிகள் அதை மறக்கவில்லை; பழி வாங்கத் துடித்து நின்றனர் என்பதை எண்ணிப் பார்க்க முடியாத கருத்துக் குருடர்களாக ஆட்சியாளர்கள் இருந்தனர்.

ஆனுல், பாகிஸ்தான் முஸ்லிம் கட்சியின் பத்திரிக்கையான 'ஆசாத்' மட்டும் அபாய அறிவிப்பாக ஒரு தலையங்கம் தீட்டியிருந்தது.

''லீக் எனகிற பெயரில் எந்த வாழை மரத்தை நிறுத்தி வைத்தாலும் கூட கிழக்கு பாகிஸ்தானி ஒட்ட

(10ம் பக்கம் பார்க்க)

## வாசகர் கருத்து

'கோவை'யின் அரசியல் மடல் உளம் கவர்கிறது. தமிழகப் பயணம் பற்றிய தொடர் கட்டுரையை எதிர்பார்த்திருந்தேன். காலம் சதி செய்துவிட்டது.

—நெல்லை ஐ. நடேஸ்
நெல்லியடி.

*

ஆசிரியர் அவர்களுக்கு:-

தங்கள் உணர்ச்சி குமுறுகின்ற உள்ளக் கிளர்ச்சிகளுக்கு உணவாகும் அரசியல் மடல்தனை நீண்டகாலமாகக் காணுது கண்களும் பூத்துப்போய் இருந்தோம். இரு வாரங்களாக மடல் கண்டு மகிழ்ந்தோம்.

—ஓ. குலேந்திரன்
மூதூர்.

*

அன்பான கோவை அண்ணுவுக்கு:-

நீங்கள் எங்களுக்கு தரவிருந்த தமிழகப் பயணக் கட்டுரையை ஆவலோடு படிக்க இருந்த ஆயிரக்கணக்கானவர்களில் நானும் ஒருவன். ஆனுல் எம்மை ஏமாற்றமடையச் செய்துவிட்டாரே தணிக்கை அதிகாரி...!

—ஆ. அல்பிறெட்
குடத்தனை வடக்கு.

*

அன்பான கோவையண்ணு!

ஈழத்தமிழினத்தின் விடுதலை ஏடான 'சுதந்திரன்' உண்மை, நேர்மை, பயமின்மை, என்ற குறிக்கோளுடன் சிங்கள அரசின் எடுபிடிகளை, அதாவது வடக்கே ஒன்றும் தெற்கே அதை மறைத்து வேருென்றும் கூறும் இனத்துரோகிகளின் தகிடுதத்தங்களை வாரத்திற்கொருமுறை தமிழ் மக்களுக்கு அம்பலப்படுத்துவதை என்னுல் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

அரசியல் நிர்ணய சபைக்கு தமிழ் மக்களின் சார்பில் திருத்தப் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்போவதாகக் கூறிச் சென்ற தியாகராசா, அங்கே அம்மாவின் காலிலே சரணுகதி அடைந்து வாய்பொத்தி கைகட்டி மௌனியானதை தமிழ் மக்கள் மறக்கவே மாட்டார்கள். தமிழினம் தன் மானத்துடன் வாழவேண்டுமானுல் இந்தக் 'காவடி'களைத் ஒதுக்கிவிடவேண்டும்.

வாரத்திற்கொருமுறை மலரும் 'சுதந்திரன்' நாளிதழாக மலராதா என அங்கலாய்க்கிறேன்.

—'சீனுநாணு'
மந்துவில்.

*

ஆசிரியர் அவர்கட்கு:-

மக்கள் பிறக்கும்போதே சுயநலத்துடன் பிறக்கிருர்கள். நீங்களும் ஒரு சுயநலவாதி என நான் எண்ணுகின்றேன். ஏனெனில் உங்கள் கொள்கையான 'தமிழினத்தின் சுபீட்சம்' என்ற கருத்தை நிறைவேற்ற, எங்கள் மனதைப் பறிக்கும் சுதந்திரன் இதழை வெளியிட்டு உங்கள் கொள்கையை நிறைவேற்றுகின்றீர்கள். ஆதலால் உங்கள் பத்திரிகையை தமிழ் இனம் என்றும் எதிர்பார்க்கும்.

—இ. துரைராசா
சுதந்திரப் பிரியன், மாதகல்.

*

சுதந்திரன் ஆசிரியர் அவர்கட்கு:-

தமிழ் உணர்வற்று தமிழ் அறிவற்று தமிழின் சுவையற்று நடைப்பிணம் ஆக இருக்கும் தமிழனை தட்டியெழுப்பி தன்னினத்தைப் பற்றி சிந்தனை செய்யும்படி தமிழ் உணர்வை அணு அணுவாக புகுத்தி உடலுக்கு உரத்தையும் உள்ளத்துக்கு உணர்ச்சியையும் ஊட்டும் தங்களது தமிழ்த் தொண்டினை பாராட்டுகிறேன். உங்களது கருத்தாழம் செறிந்த கட்டுரைகளும் கதைகளும் தூங்கும் உணர்வை துடிக்க வைக்கிறது. வாழ்க நீவிர் பல்லாண்டு.

—பொ. பாலகெங்காதரன்
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழினம் ஏற்றம் பெற்றிட வடக்கும் கிழக்கும் மலையகமும் இணையட்டும்!

## உழைக்கும் மலையகத் தமிழனுக்கு உரிமையை மறுப்பது என்ன நீதி?

முதலாளித்துவ நாடுகளிலும் சரி, கம்யூனிச நாடுகளிலும் சரி அந்தந்த நாடுகளின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழ்பவர்கள் தொழிலாளிகளே. அவ்வாறே எமது இலங்கை நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டிக் காப்பவர்களும் தொழிலாளர்களே. இலங்கையின் தொழிலாளவர்க்கம் எது, அது எமது நாட்டின் உயர்விற்காற்றும் பணி எத்தகையது என்பதை நினைவு கூர்வது எமது கட்டாய கடமையாகும்.

இலங்கையின் தொழிலாளரென்று கூறும்போது மலையகத்தில் தேயிலை, இரப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் தமிழ்த் தொழிலாளர்களே மனக்கண் முன்வருகின்றனர். மேலும், துறைமுகங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், தனியார் வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றில் பணி புரியும் தொழிலாளரும் தொழிலாளர் பட்டியலில் இடம் பெறுகின்றனர்.

ஆனாலும், நாட்டின் தொழிலாளவர்க்கத்தில் 80 வீதத்தை, உள்ளடக்கியவர்களும் நாட்டு வருமானத்தில் 70 வீதத்தைப் பெற்றுக் கொடுப்பவர்களுமான மலையகத் தமிழ் தோட்டத் தொழிலாளிகளே நமது நாட்டில் முக்கிய இடம் பெறுகின்றனர்.

மலையகத் தமிழ்த் தொழிலாளர்களில் 90 சத வீதமானோர் குடியுரிமை அற்றவர்கள். கல்வி வசதியோ இல்லை. வறுமையால் வாடுகின்றனர். ஆம், அரசாங்க, கூட்டுத்தாபனங்களில் பணி புரியும் தொழிலாளர்களைப் போன்று மாதச் சம்பளம் பெறுபவர்களல்லர் மலையகத் தொழிலாளர்கள். மாதம் 30 நாட்களும் பாடுபட்டு உழைத்தாலும் அரசாங்க, கூட்டுத்தாபனங்களிலுள்ள தொழிலாளர் பெறும் சம்பளத்தில் அரைப்பங்கிற்கும் குறைவாகப்பெறும் அவல நிலை நிலவுகின்றது. ஏனைய தொழிலாளரைப் போன்று வருடாந்த சம்பள ஏற்றம் மலையகத் தொழிலாளருக்கு இல்லை. குடியிருப்பு வசதியோ மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளது.

இவ்வாறு பல இன்னல்களுக்கு மத்தியிலும் மலையகத் தமிழ்த் தொழிலாளர்கள் இந்நாட்டிற்காற்றும் பணி மகத்தானது.

**குறிஞ்சில் மனோகரன்**

பந்தி தணிக்கை

கடந்த வருடம் இலங்கையின் வருமானத்தில் தேயிலையால் பெற்ற வருமானம் 111 கோடியே 86 லட்சம் என்றும், அது நாட்டின் மொத்த வருமானத்தில் அரைப்பங்கிற்கும் கூடியது என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தேயிலையுடன் இரப்பரையும் சேர்த்தால் கிட்டத்தட்ட 85 சத வீதத்தை எட்டி விடும் என்பதை அறிய முடிகின்றது. இவ்வாறு தேயிலை இரப்பரினால் வருமானத்தை அடைந்து அதனால் நாட்டின் அன்றாட நிலையில் உயர்ச்சி காணும் இலங்கை, தேயிலை, இரப்பர் தோட்டங்களில் பாடுபட்டுழைக்கும் தமிழ்த் தொழிலாளரின் நிலைமையைப்பற்றிச் சிந்திக்காமலிருப்பது விசித்திரமானது.

தேயிலை, இரப்பர் தோட்டங்களிலிருந்து கிடைக்கும் வருமானமே இந்த நாட்டின் ஒவ்வொரு அபிவிருத்தித் துறையிலும் பயன்படுத்தப் படுகின்றது என்பதை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

வறுமையால் வாடி, கல்வி வசதியை இழந்துள்ள மலையகத் தமிழ்த் தொழிலாளர்களை மலையகத்திலுள்ள ஒரு சில சுயநலமிகள் தவறான பிரசாரங்களால் தவறான வழியில் இட்டுச் செல்கின்றனர். அந்நிலையை மாற்ற வேண்டும். முதலில் இனரீதியாக—தமிழர்கள் என்றபடி வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழர்களுடன் இணைந்து பின் மானமுள்ள மனிதர்கள், நாட்டை வாழவைக்கும் பெருமையை உடையவர்களென்ற உரிமையுடன் இலங்கையின் பெரும்பான்மை இனத்தவருடன் சரிநிகர் சமமாக வாழ மலையகத் தமிழர்கள் முன் வர வேண்டும்.

மலையகத் தமிழர்கள் வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழர்களைத் தவறான பிரசாரத்தால் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பதை விட்டு விட்டு, சகோதரபாசத்துடன் ஒன்று பட்டு வாழ முற்பட வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழர்களுடன் மலையகத் தமிழரும் இணைந்து வாழ்ந்தால் மட்டுமே மலையகத் தமிழருக்கு ஒளிமயமான எதிர்காலம் உருவாகும். அப்பொழுது தான் மலையகத் தோட்டத் தமிழ்த் தொழிலாளரை உரிமையுள்ள மனிதர்களாக மானமுள்ள மனிதர்களாக மாற்றார் மதிப்பர். மலையகத் தமிழர் மத்தியிலுள்ள சுயநலமிகள் ஒழியவும் வழி கிட்டும். மலையகத் தமிழரின் உரிமைக் குரல் ஓங்கி ஒலிக்கும்.

மகாத்மாகாந்தி, மாட்டின் லூதர்கிங் ஆகியோர் காட்டிய அறவழியில், அன்பு வழியில் உலக நாடுகள் ஏற்றுக்கொண்ட மனித உரிமைக்காக மலையகத் தமிழரின் ஓங்கி ஒலிக்கும் உரிமைக் குரலை வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழ்ச் சகோதரரும் இதயத்திலிருத்தி மலையகத் தமிழரின் நல்வாழ்வுக்கு உதவும் நிலைமை விரைவில் தோன்றவேண்டும்.

வடக்கு, கிழக்கு, மலையகத் தமிழரின் இதயங்கள் இணையும் நன்நாள் ஈழத்தமிழரின் பொன்னாள் என்பதை மறுக்கமுடியாது.

### சமதர்மம் மலரச் செய்வோம்.

—வி. எல். பெரைரா—

உறங்கி உறங்கி கெடுத்தது போதும்
உரிமையை காக்கப் புறப்படு தோழ!
மறத்தின் தன்மை மறந்தது போதும்
மலையகம் காக்கப் புறப்படு தோழா!
அறத்தின் புனிதம் விளக்கம் பெறவே
அடிமை விலங்கை உடைத்தெறிய
புறத்தின் புகழை பாடுவதற்கு
புலியென நீயும் பாய்வாய் தோழா!

காட்டிக் கொடுப்போர் பட்டியல் பார்ப்போம்
கட்டி வைத்து சாட்டை கொடுப்போம்
நாட்டில் இருக்கும் மலையக மக்கள்
நாம் இனி ஓரணியாய் இங்கு சேர்வோம்!
பூட்டிய விலங்கை பொடி பொடியாக
புரட்சி வேகம் புயலாய் பரவ
வீட்டுக் கொரு ஆண் வீரனாக
விடுதலை கேட்க விரைவோம் தோழா!

சந்தா பணத்தில் வயிறு வளர்க்கும்
சத்தம் போடும் தலைவர்களை ஒழிப்போம்
கந்தன் நந்தன் போன்ற மக்களை
கடமை வீரராய் மாற்றி மகிழ்வோம்
குடியுரிமை தர மறுக்கும் அரசை
குட்டிச் சுவராக்கிட விரைவோம்
பிடித்த வெறியை தகர்த்தெறிவோம்
புது சமதர்மம் மலர செய்வோம்!

## மலையகத்திலே........

## [4] அட்டைக் கடியும் அரிய பெருநடையும்!

### வரலாறு காட்டும் தேயிலைத்தோட்ட நாட்டுப்பாடல்கள்

**தொ. சிக்கன்ராஜு**

பிழைப்பிற்காக தமது சொந்த ஊரைவிட்டு வந்தவர்கள்—தாம் வருவதற்கு முன் பலர் சொன்ன அனுபவங்களையெல்லாம் வங்காளக்குடாவைக் கடந்து மலைப் பிரதேசங்களை நோக்கி தமது பயணத்தை ஆரம்பித்தபோது கண்கூடாகக் கண்டார்கள்; அனுபவித்தார்கள்.

''நாளோட நாளா
கோடாலி சத்தம்
குமுறுதங்கே
காட்டுக்குள்ளே
உறுமுமது கேட்டா
... ... ...
உறுமும் புலி சத்தம்
நரி ஊளையெல்லாம்
காட்டோடு அழிஞ்சுதடி''

என்று அன்றைய மலையகத்தை வர்ணித்திருப்பது இந்தப் பாடலின் வாயிலாக அறியலாம். இப்படி உறுமும் புலியும், ஊளையிடும் நரியும், கொட்டும் அரவமும், விஷ ஜந்துக்களும் வாழும் பிரதேசமாக அன்றைய மலையகம் இருந்தது. மழை கொட்டியது; பனி பெய்தது; காற்று வீசியது மக்கள் வாழ்வதற்குத் தகுதியற்ற பிரதேசமாகவே இருந்தது. அதோடு மாத்திரமல்ல மலேரியா காச்சலையும், விசஜுரத்தையும் பரப்பும் விசக் கிருமிகளின் உறைவிடமாகவும் இருந்தது.

கிட்டத்தட்ட இருநாற்றைம்பது, முன்னூறு மைல்கள்—காடு மலைகளையெல்லாம் கால்நடையாகக்கடந்து செல்ல வேண்டிய நீண்ட தூரம். முட்செடிகளும், கொடிகளும், மரங்களும் பயணத்தைத் தடுத்து வேகமாகத் தொடர முடியாமல் செய்தன.

''அட்டை இரத்தம்
குடிக்கிறதும்
அரியப் பெரு நடையும்
கட்டை எடறுறதும்—
அங்கே
காணலாமே கண்டியிலே''

என்று தமது ஊரிலே கேள்வியுற்றவற்றை அப்படியே கண்டார்கள். இந்த இயற்கையின் குணத்திற்கு அன்று வந்தோர்பட்ட அவஸ்தைகளும், துன்பங்களும், இழப்புகளும் கொஞ்சநஞ்சமானதல்ல.

''வாடை அடிக்குதடி
வடக்காற்று வீசுதடி
கோடை இடி போல
குமுறுதடி என் மனசு''

என்று (குறிப்பு [illegible] பாடல் வேறொரு சந்தர்ப்பமும் கருத்தும் வழங்கபாடப்படுவதும் உண்டு) பின்னர் தான் மனம் கலங்கினார்கள். ''ஏன் வந்தோமென்று மனம் குமுறினார்கள்.

அது மட்டுமா?

குளிர் ஜுரத்தாலும், மலேரியா காச்சலாலும் பலர் மாண்டு போனார்கள். ஒரு புள்ளி விபரப்படி 1840ல் ஆயிரத்துக்கு 250 பேர் காலமானார்கள். 1843 லிருந்து 1859 ஆண்டுவரை 90400 பேர் வந்தார்கள். இவர்களில் பாதிப்பேர்கூட மிஞ்சவில்லை. 1854ல் 11000 பேரும், 1867ல் 10000 பேரும், 1877ல் 22478 பேரும் இந்த நோய்களால் பீடிக்கப்பட்டு மாண்டார்கள். பெரும்பாலும் குருநாகலைப் பகுதியிலேயே இந்த [illegible] திகளிலேயே பெரும்பாலானோர் மாண்டார்கள்.''

தோட்டத் தொழிலாளர்கள் நடந்துவந்த ஒற்றையடிப் பாதைகளில் நோயினால் இறந்து போனவர்களின் எலும்புகள் மக்கிப் பேரய் நொறுங்கி, அந்த பாதைகள் வெண்மை பூத்துப்போய் இருந்தன'' என்று ஒரு அரசாங்க அதிகாரி தனது பிரயாண குறிப்பில் குறிப்பிட்டிருக்கிறார். அந்த கட்டத்தில் நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் அநாதைகளைப்போல மாண்டார்கள். புதைப்பதற்குக்கூட வகையற்றுப்போய் மாண்டவர்களின் பிணங்களை வருகிற வழிகளில் கரைகளிலே போட்டு, இலை, தழை செடிகளினால் 'அடக்கம்' செய்தார்கள்.

அந்தக் கொடிய நோய்கள் பீடித்திருந்த காலத்தில் வைத்திய வசதிகளோ மருத்துவமனைகளோ இல்லை. கண்டியில் மாத்திரமே ஒரேயொரு மருத்துவமனையிருந்தது. அங்கு அனுமதிக்கப்பட்ட நோயாளிகளில்கூட 63% உயிர் பிழைக்கவில்லை. அங்குகூட இடவசதிகள் இல்லாமல், சிகிச்சை பெற முடியாமல் கண்டி ஏரிக்கரையிலே இறந்துபோனவர்கள் எத்தனையோ பேர்.

★

நோயினால் தொழிலாளர்கள் மாண்டொழிவதை தடுக்கும் முகமாக, அவர்களுக்கு நன்மை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக தோட்ட சொந்தக்காரர்களால் 1904ம் ஆண்டில் 'லேபர் கமிசன்' என்ற ஒன்று ஆரம்பிக்கப்பட்டு புதிதாக வருபவர்களுக்கு அதன் மூலம் உணவு, பணம், ரயில்வே டிக்கட்டுக்கள் அனைத்தும் வழங்கப்பட்டன. (ஆனால் இதே நன்மைகள்தான் பின்னால் தொழிலாளர்களுக்குப் பாதகமாக அமைந்து, தொழிலாளர்களை கடன் தொல்லைக்கு உள்ளாக்கி 'பற்றுச்சீட்டு' என்ற அடிமை முறையை ஏற்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது) என்றாலும் தொழிலாளர்கள் பட்டது அவதிதான்.

''ஊரான ஊர் இழந்தேன்
ஒத்தப் பனைத்
தோப்பிழந்தேன்
பேரான கண்டியிலே
பெத்தத்தாயை
நான் இழந்தேன்''

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அத்தியாயம் (1)

குத்து விளக்கு முத்துப் போல் எரிந்து ஒளி வீசியது: ஊதுவத்தியின் மணமும், சாம்பிராணியின் மணமும் கலந்து ஒரு சுகந்த மணம் வீடு முழுவதும் பரவியிருந்தது. தம்புராவின் சுருதியோடு இணைந்து ஒலித்த பாரதியின் குரலிலே தோய்ந்துபோய் உட்கார்ந்திருந்தாள் அன்னபூரணியம்மாள்.

பாரதி, பாட்டை முடித்து விட்டு, தம்புராவை வைத்து விட்டு எழுந்தபோது ''ஆண்டவனே என் பிள்ளை ரகு திருந்தமாட்டானா? அவனுக்கு இந்த வருடத்திலாவது ஒரு கால் கட்டுப் போட்டு, என் மனதில் அமைதியைத் தோற்றுவிக்கமாட்டாயா?'' என்று கேட்டபடியே அன்னபூரணி அம்மாள் நின்றுகொண்டிருந்தாள்: அவள் விழிகளில் நீர்த்துளிகள் முத்துப் பரல்களென உருண்டுகொண்டிருந்தன.

''அம்மா! அண்ணனுக்காக நீங்கள் தினமும் இப்படிக் கண்ணீர் விடுகின்றீர்கள். ஆனால் அண்ணன் நீங்கள் நினைப்பது போலிருப்பான் என்று என்னால் நம்ப முடியவில்லையேயம்மா'' என்றாள் பாரதி.

''கைப்புண்ணுக்கு கண்ணாடி வேண்டுமாம்மா. அவன் திருந்தி நடந்தால், நல்லவனாயிருந்தால் எனக்குச் சந்தோஷம்தானே. எல்லாம் அவன் விட்ட வழி'' என்று அவள் கூறி முடித்த போது, அழைப்பு மணி வீடு முழுவதும் கணகணவென ஒலித்தது.

''எங்கப்பன் முருகன் என்னைத் தவிக்கவிட மாட்டான் பாரதி. பார்த்தியா மணி ஒலிக்கிறது. போய்ப்பாரேன் பாரதி. யாரோ வந்திருக்கிறார்கள் போலிருக்கே'' என்று கூறினாள் அன்னபூரணி அம்மாள். பாரதி பூசை அறையை விட்டு வெளியே எழுந்து சென்றாள்.

அழைப்பு மணியின் பித்தானை அமுக்கிவிட்டு, யார் வருவார்களோ என எண்ணமிட்டவாறே அங்குமிங்கும் பார்த்து மிரண்டுகொண்டு நின்றாள் பானுமதி.

வீட்டு முகப்பில் அழகான பூஞ்செடிகள் பூத்துக்குலுங்கி நின்றன. வீட்டின் தென்புறமாக விதம்விதமான குரோட்டன் செடிகளும், ரோஜாக் கன்றுகளும், குண்டு மல்லிகையுமாகப் பார்த்துக்கொண்டேயிருக்கலாம் போல் தோன்றியது. மெல்லென வீசும் சீதளத் தென்றலில், மலர்களின் நறுமணம் கலந்து வந்ததாலோ என்னவோ, அந்த வாசனையில் தன்னையே மறந்து நின்றாள் பானுமதி.

கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்த பாரதி சில கணப்பொழுது அப்படியே அவளைப் பார்த்துக்கொண்டு நின்றாள். பானுமதி—மலர்களைப் பார்த்துக்கொண்டு நின்றவள்-தோளில் யாரோ தொடுவதை உணர்ந்து திடுக்கிட்டுத் திரும்பினாள். திரும்பியவள் திகைத்தவளாய் 'பாரதி நீங்களா?' என்றாள்.

''பானு நான் முதலில் நம்பவேயில்லை. அப்புறம் நீ என்னை அழைத்தபோது தான் உண்மையிலேயே பானுமதிதான் என்பதை உறுதி செய்துகொண்டேன். அது சரி ஏது இந்தப் பக்கமாக... வா பானு உள்ளேயிருந்து பேசலாம்'' என்று அவள் கரங்களைப் பற்றி உரிமையுடன் அழைத்துச் சென்றாள்.

பானுமதியும் பாரதியும் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். அது மட்டுமல்ல ஒருவரோடு ஒருவர் நெருங்கிய சிநேகிதிகளுமாவர். பானுமதி பல்கலைக் கழகத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டு, மேற்படிப்புக்குச் சென்றுவிட்டாள். ஆனால் பாரதிக்குப் படிப்பைத் தொடரமுடியாது போய்விட, அவள் திருமணத்துக்குத் தயாராகிவிட்டாள். பதிவுத் திருமணம் முடிந்துவிட்டது. அவள் கணவன் லண்டனில் உயர் கல்வி கற்கச் சென்றுவிட்டான். இன்னும் மூன்று மாதங்களில் திரும்பி விடுவான். அதன் பின்பு தான் சம்பிரதாயப்படி திருமணம்.

நமது
தொடர்கதை

''ஏன் பானு ஒன்றுமே பேசாமலிருக்கிறாய்?'' என்றாள் பாரதி.

''பாரதி, இது உங்கள் வீடுதானே?''

''ஆமாம் எங்கள் வீடுதான். அதுசரி நாங்கள் கல்லூரியில் படித்தபோது .எப்படி நீ—உன் என்று என்னை அழைத்தாயோ, அப்படியே அழைப்பதுதானே. எனக்கு மரியாதை எல்லாம் தேவையில்லை பானு.''

''பாரதி உனக்குத் திருமணம்...'' என்று நிறுத்தினாள்.

''சட்டப்படி முடிந்துவிட்டது. கல்யாணத்துக்கும் திகதி வைத்தார்கள். இருந்தாற் போல் அப்பா மாரடைப்பால் இறந்துபோனார். பின்னர்...'' என்று தன் கதையைக்கூறி முடித்தாள்.

''நீங்கள் இங்கே வந்து...''

''மூன்று வருடங்களாச்சு. அது பெரிய கதை. அது சரி பானு. நீ வந்த விடயத்தைக் கூறவில்லையே'' என்று கேட்டாள் பாரதி.

''பாரதி நான் இங்கே வரும்போது நம்பிக்கையீனத்துடன் தான் வந்தேன். ஆனால் உன்னைப் பார்த்ததும் பாதி நம்பிக்கை ஏற்பட்டது. உன் வீடென்று அறிந்ததும் முழு நம்பிக்கையே ஏற்பட்டுவிட்டது.

''என்னென்று தான் விடயத்தைச்சொல்லேன்.''

''வீடு வாடகைக்கு...''

''வீடு வாடகைக்கா? உனக்கா?'' என்று துள்ளி எழுந்தாள் பாரதி.

''ஏன் பாரதி எனக்கு...''

''ஒன்றுமில்லைப் பானு. விளம்பரத்தில் ஆண்களுக்கு மட்டும் என்று போடப்பட்டிருந்ததே?''

''பார்த்தேன். ஆனால் வேறு யாராவது எனக்கு முன்னடி வந்தார்களா?''

''நோ, நோ.

''அப்புறம் என்ன ...? பாரதி. நான் டவுனிலே தான் லேடீஸ் கொலிஜ்ஜில் ரீச்சராயிருக்கேன்: அங்கேயிருக்க முடியாது பாரதி. உனக்கு என்னைப்பற்றித் தெரியும்தானே?''

''அதை வேறு சொல்லணுமா?''

''கடைசியில் நேற்றுத் தான் ஒரு முடிவுக்கு வந்தேன்.

''என்ன முடிவு பானு''

''தொடர்ந்து படிப்பிப்பதா? அல்லது வேலையை விட்டிட்டுப் போறதா? என்பதுதான்.''

''ஏன் அப்படி?''

''அதுதான் இடப் பிரச்சினை. பாரதி, எப்படியாவது உங்கள் வீட்டில் எனக்கு இடம் தருவாய் என்ற நம்பிக்கை சற்று முன்னர்தான் ஏற்பட்டது. பிளீஸ், நீயே சிபார்சு செய்து எனக்காக...''

''பானு! உனக்கில்லாத வீடா? ஆனால் அம்மா இலகுவில் சம்மதப்பட மாட்டாளே!''

''ஏன்?''

''இங்கே கல்யாணமாகாத அண்ணன்மார்கள் இருக்கின்றார்கள். அப்புறம் ஊரார்... அதனால் தான் ஆண்களுக்கு மட்டும் என்று...''

''அது சரி பாரதி, என்னைப்பற்றி உனக்குத் தெரியும்தானே? அப்புறம் நான்...''

**யாழ் - ஜனார்த்தனன்**

''பானு நான் உண்மையைச் சொல்லப் பயப்படவேயில்லையடி. எங்க சின்னண்ணாவைப் பற்றி ஊரெல்லாம் கண்டபடி சொல்லுவார்கள். அப்புறம் நீயும்—இங்கிருந்தால், உன் நல்ல பெயருக்கு அவனால் கெட்ட பெயர் ஏற்பட்டுவிடும் என்று அம்மா...'' அவள் விழிகள் பனித்து நின்றன.

''பாரதி! உங்கண்ணனைப் பற்றி அம்மா கூடவா தப்பா நினைக்கிறார்கள்?'' என்றாள் பானு.

''ஆமாண்டியம்மா. நினைப்பதென்ன? அவன் செய்வது கூட ஒன்றும் நல்லாயில்லையே? பிறர் சொல்லித்தான் நான் தெரிந்து கொள்ளணுமா? என் வயிற்றில் இவன் எங்கு வந்து பிறந்து தொலைத்தானோ?'' என்று கூறினாள் அங்கு வந்த அன்னபூரணி அம்மாள்.

''அம்மா! நீங்களே இப்படிக் கூறினால் மற்றவர்கள் எப்படி நினைப்பார்கள்? சின்னண்ணா என்னதான் அப்படி உங்களுக்கு...'' என்று கூறி நிறுத்தினாள் பாரதி.

''பாரதி! [illegible] கதைக்கிறது போகட்டுமடி இங்கே எத்தனைபேர் அவனைத்தேடி வாறாளவை; இதெல்லாம் ... ஏன்டியம்மா உனக்கு இதெல்லாம் எதுக்கு வீடு உனக்குக் கிடைக்காது'' என்றாள் அன்னபூரணி அம்மாள்.

''அம்மா! அப்படிச்சொல்லாதிங்க. கொடும் புலிகள் வாழும் காட்டிலிருப்பது போன்று, இருந்த இடத்தில் தவித்தபடியால்தான், ஆண்களுக்கு மட்டும் என்று விளம்பரம் செய்திருப்பினும் என் உண்மை நிலையை எடுத்துக் கூறி, காலில் விழுந்தாவது கெஞ்சிக் கெட்போம் என்று ஓடிவந்தேன்'' என்றுமேலும் என்னவோ எல்லாம் கூறினாள் பானுமதி.

''உன் பேரென்னம்மா பானுமதியா?''

''ஆமாமம்மா''

''பானு! வீட்டை உனக்குத் தருவதில் எனக்கொன்றும் ஆட்சேபனையில்லை; வீணாக உன்பெயரைக்கெடுத்துக் கொள்ளப் போறியே என்று தான்...'' என்றாள் அன்னபூரணி அம்மாள்.

''அம்மா! பானு மிகவும் கெட்டிக்காரி. அவள் எல்லோரையும் சமாளித்து விடுவாள். பாவம் அம்மா'' என்றாள் பாரதி.

''எனக் கென்னடியம்மா. அப்புறம் உன் பிள்ளை என்னை அப்படி இப்படி....எதுவும் என்னிடம் வந்து...''

''கடைசிவரைக்கும் அப்படி நடக்காமல் இருந்து விடுகின்றேன்'' என்றாள் பானுமதி.

''பாரதி நீயே கூட்டிக்கொண்டு போய் வீட்டைக் காட்டு'' என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள் அன்னபூரணி அம்மாள்.

அன்னபூரணி அம்மாளின் பெரிய வீட்டிற்குத் தென்கிழக்குப் பக்கமாக, நூறு யார் தொலைவில் இருந்தது அந்தச் சிறிய வீடு. வீடு என்று சொல்ல முடியாதபடி நவீன பாணியில் அமைக்கப்பட்ட ஒரு ஹோட்டல் அறை என்று தான் கூற வேண்டும். படுக்கை அறை, படிப்பதற்கும் புழக்கத்துக்குமாகச் சேர்த்து ஒருஅறை, சமையல் அறை, குளியல் அறை எல்லாம் சேர்ந்து மிகவும் துப்பரவாகவும், அழகாகவும் விளங்கியது அந்தச் சிறிய வீடு, பார்த்த மாத்திரத்திலேயே பானுமதிக்கு மிகவும் சந்தோஷம்.

''பாரதி! நான் விரும்பும் தனிமையும், அமைதியும் இந்த வீட்டில் கிடைக்கும் பாரதி'' என்றாள் பானு.

''அமைதி கிடைக்குமோ என்னவோ? அதை முன் கூட்டியே முடிவு செய்யாதே பானு: ஆனால் தனிமையில் நீ இருந்தாலும், என் தங்கையர் இருவர், தம்பி ஒருவன் இங்கே வந்து தொல்லை தருவார்கள். அவர்களோடு அளவோடுபழகிக்கொள். ரோட்டுக்குப் போவதானாலும் தனிப்பாதை இதற்குண்டு; உன் விருப்பப்படியே செய்யலாம்பானு'' என்றாள்பாரதி.

சில நிமிடப்பொழுது சிந்தனையிலாழ்ந்திருந்தாள் பானுமதி. 'அழகான அமைதியான வீடு. சுற்றிவர அழகான பூந்தோட்டம். நல்ல குடும்பம் என்றாலும் அதில் ஒரு விஷப் பூண்டா? அது ஒன்று போதுமே அந்தக் குடும்பத்தைக் கெடுப்பதற்கு; பெற்ற தாயே புறக்கணித்துக் குற்றம் சுமத்துமளவுக்கு அவள் பிள்ளை கெட்டவன் என்றால், அவனைப் பற்றிச் சிந்திக்காமலிருப்பதும் தவறுதான்: அப்படி என்ன செய்து விடுவான் பார்ப்போமே' என்று தனக்குள் திட்டமிட்டவளாக நிமிர்ந்த போது, பாரதி அவளையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

''என்ன பானு ஒரேயடியாய் சிந்தனையிலாழ்ந்து விட்டாய்? என்றாள் பாரதி.

''பாரதி! உங்கள் சின்னண்ணாவைப் பற்றிப் பயமுறுத்தி விட்டீர்கள். அது பற்றித் தான்...''

''பானு! எங்கண்ணாராஜாராமன் பெண்டாட்டி வீட்டிலேயே தஞ்சம். அவர் நல்லவர்; ஒழுங்கானவர் என்று ஊரெல்லாம் சொல்லும் அதே அண்ணனுடன் பிறந்த தம்பிதான் இந்த ரகுராமன். 'மைனர்' என்று சிலர் கூறுவார்கள். பொல்லாதவன் என்றாலும் அவனிடம் உள்ள நல்ல குணம் எங்கள் பெரியண்ணாவிடமே கிடையாது. அப்படிப்பட்ட ஒரு பிறவி ரகுராமன் என்றாள் பாரதி.

''என்ன வேலை பார்க்கிறார்?''

''வேலையா? எதுவுமே கிடையாது. இரண்டொரு இடங்களில் வேலை பார்த்தான். அதுவும் ஒழுங்காய்ப் பார்த்தால்த்தானே? அவங்களோடு சண்டை போட்டுக் கொண்டு வேலையையே விட்டுவிட்டான்.''

''எதுவரை படித்தார்?''

''பீ. ஏ. படித்தான்; ஆனால் பரீட்சை எடுக்கு முன்பே ஒரு வேலையில் சேர்ந்தான். கடைசியில் படிப்பும் இல்லை. வேலையும் இல்லை; நான் தான் சொன்னேனே, அவன் ஒரு விசித்திரப் பிறவி.''

''அப்படியா?'' என்றவள், அவன் எப்படியிருப்பான் என்ற சிந்தனையில் லயித்து விட்டாள்.

மனிதர்கள் சில சமயம் அபூர்வ பிறவிகளாயிருப்பது விந்தைதான். அதிலும் வாழ்வில் ஒரு பிடிப்பில்லாமல், பொறுப்பில்லாமல் நடந்து கொள்வான் என்றால், அவன் ஊதாரியா? அல்லது ......?

''பானு''

''என்ன பாரதி''

''நீ எப்போ குடிவரப் போறே?''

''இன்று மாலையே வரலாம் என்று எண்ணுகின்றேன் வாடகை முற்பணம் ஏதும் ......?''

''பானு உன்னிடம் முற்பணமா? உன்னைப்பற்றி எனக்குத் தெரியாதா? நீ பிறர் தயவை எதிர்பார்த்து வாழாதவள். ஆனாலும் வாடகையை மாதாமாதம் அம்மாவிடம் கொடுத்துவிடு போதும். வேறு உனக்கு என்ன உதவி வேணுமோ நான் இருக்கேன்'' என்றாள்.

அவர்கள் வீட்டைப் பூட்டிக்கொண்டு பெரிய வீட்டின் முகப்புக்கு வந்தபோது வெளிக்கேற்றுக்குச்சமீபமாக ஒரு பொலீஸ் ஜீப் வந்து நிற்பது தெரிந்தது.. அதிலிருந்து பொலீஸ் இன்ஸ்பெக்டர் மட்டுமே இறங்கி வந்தார்.

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு போக்கும் நெல்லிக்காய்

மூலிகை இனங்களில் மக்களுக்குப் பெரிதும் பயன்படும் வகைகளை நமது தமிழகத்துப் புலவர்கள், இலக்கியங்களிலே புகுத்தி வைத்துள்ளனர்.

நெல்லிக் கனியைப் பற்றி நம்நாட்டு இலக்கியக் கவிதையான சிறுபாணாற்றுப் படையில் வெளியாகிறது: 1968ம் ஆண்டு உலகத் தமிழ் மாநாட்டில் தமிழக அரசு நடத்திய மாபெரும் ஊர்வல பவனியில் அதியமான் தான் கண்ட ஒரு நெல்லி கற்பகக் கனியினைத் தமிழுக்கு உழைத்த ஒளவையாருக்கு அளித்த காட்சியைச் சித்திரப் பதுமையாக்கி தமிழகப் பெரு மக்கட்கு எடுத்துக் காட்டியது, உண்மையில் நம் முன்னோர்களுக்கு மூலிகைகளின் பேரில் இருந்த தனிப் பெரும் ஆர்வத்தைக் காட்டுகிறது:

"கமழ்" பூஞ்சாரற்கவினிய
நெல்லி

அமிழ்து விளை திங்கனி
ஒளவைக் கீந்த

உரவுச் சினங் கனலும் ஒளி
திகழ் நெடுவேல்

அரவக் கடல்தானை
அதிகனுங் கரவாது:

—வள்ளல் எனப் பெயர் பெற்ற அதியமான் ஒரு சமயம் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றிருந்த போது அங்குள்ள மலைச்சாரலில் நின்ற ஒரு தெய்வீகத்தன்மை வாய்ந்த நெல்லிமரத்தில், ஒரே ஒரு நெல்லிக் கனியைக் கண்டு எடுத்து வந்தார். அக் கனியை உண்போர் நரை, திரை, மூப்பின்றி நெடிது வாழ்வர் என்ற செய்தியும் சான்றோர் கூறக்கேட்டு, அதனைத் தான் உண்ணது முருகன் அருள் பெற்று தமிழுக்கு உழைத்து வரும் ஒளவைப்பிராட்டிக்கு கொடுத்து மற்றும் பல்லாண்டு ஒளவையார் தமிழகத்திற்கும் தமிழுக்கும் தொண்டு செய்தனர் என்றால், அந்த அரசனையும் நெல்லிக்கனியையும் மக்களின் எதிர்கால சந்ததிகள் மறக்காமல் இருக்க இவ்வமிழ்து விளைத்தீஞ்சுவைக் கனியினை இலக்கியமாக்கி அன்றைய நாளிலேயே அதிகமானுக்குப் புகழை ஈந்து விட்டனர்.

இந்த நெல்லி மரம் மலைப் பாங்கான உயர்ந்த இடங்களில் ஏராளமாக வளர்கிறது. நெல்லியில் கரு நெல்லி, அரு நெல்லி என்ற இனங்கள் உண்டு. என்றாலும் மற்ற இருவகைகளும் எளிதாகக் காணக்கூடியதே!

## பயனும் குணமும்

பொதுவாக இதன் இலை, பூ, வேர், காய், பட்டை, விதை யாவும் மருத்துவப் பயன் உடையதாகும். காய், உலர்ந்த காய் வேர் ஆகியவை வழக்கில் மருந்துப் பயனுடையவையாக கருதப்படுகின்றன. நுரையீரலுக்கு, வலுவைத் தந்து பிணிகளைப் போக்குவதில் சிறப்புடையது: மற்றும் கல்லீரல், மண்ணீரல், குருதி மண்டலம் ஆமாசயம் போன்றவைகளில் இதன் பணி மிகவும் போற்றத்தக்கதாகிறது.

எனவே இது கற்பக மூலிகைகளில் காயகற்பம் போல் உடலை உரமாக்கும். சிறுநீரைப் பெருக்கும். அதிக சூட்டைத்தணித்து சுவாச கோசத்தின் குற்றங்களை நீக்கும் என்பது மருத்துவ ஏடுகளின் சான்று:

## வேர் குடிநீர்

நெல்லி மரவேர் 30 கிராம் பச்சையாக எடுத்து இடித்து ஒரு குவளை நீர் விட்டுக் காய்ச்சி அரை குவளையாக தினம் காலை நேரம் மட்டும் சீனி சேர்த்து பருகிவர முக் குற்றத்தால் (வாத, பித்த, சிலேத்துமம்) வரும் ஆரம்ப பிணிகள் யாவும் விலகும்:

## நீரிழிவு நீங்க...!

சர்க்கரை வியாதிக்குப் பூரண குணமே இல்லை என்பது ஆங்கில மருத்துவத்தின் சித்தாந்தம். எனவே அம்முறையில் நாள் தோறும், இன்ஸுலின் என்ற ஊசி மருந்தை உடலில் ஏற்றிக் கொண்டு வலியால் வேதனைப்படுவோர் அனேக லட்சம் பேர் என்று துணிந்து கூறலாம். இத்தகைய முடிவு வியாதியை வேருடன் களைந்து பூரண குணம் செய்து கொள்ள விருப்பமுடையோர்கள் கீழ்க் கண்ட முறைப்படி தானே செய்து போக்கிக்கொள்ளலாம்.

## முறை விவரம்

பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்கள் நெல்லிக் காய் காய்க்கும் பருவ காலங்கள் ஆகும். சாதாரணமாக காய்க்கும் நெல்லிக்காய்

நஷ்டம், குருதிக் குறைவு, தாகம், இரத்த வாந்தி, பித்த வாத்தி, பைத்திய ரோகம், ஆண் குறியில் ரணம், மேகநோய், கண் எரிச்சல், பசி மந்தம் யாவும் தீர 120 நாள் குடித்து வருவது இன்றியமையாததாகும்.

## கண் எரிச்சலும், தலைமுடி கொட்டுவதும் நிற்க

நெல்லிக்காய் இடித்துப் பிழிந்த சாறு, பொன்னாங் கண்ணிச்சாறு, பசுவின் பால் ஒவ்வொன்றிலும் அரை லிட்டர், செவ்விள நீர் 2 லிட்டர் எள் எண்ணெய் $1\frac{1}{2}$ லிட்டர்: இவைகளை நன்றாகக் கலந்து சாதிக்காய், சாதிபத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, தன்றிக்காய், கடுக்காய், இவைகளை 17 கிராம் இடித்துத் தூள் செய்து, மேல் ஒன்று

பக் கனியை நம் நாட்டு மக்கள் சேகரித்து பக்குவப் படுத்தி ஊறுகாய் செய்து உணவுடன் கொள்ளுவது பண்டைய நாகரீகம், நெல்லி ஊறுகாய் சாப்பிட உடல் இறுகி, கெட்டியாகும். பலம் உண்டாகும். ஆயுள் பெருகும். எலும்பு வளர்ச்சி இல்லாத குழந்தைகளுக்கும், க்ஷயம், காசம், எலும்புருக்கி கணமாந்தை, முதலிய நோய் கண்ட சிறுவர், சிறுமியர் கட்கு நெல்லிக்காய் ஊறுகாய் வைத்து உணவு நாள் தோறும் தவறாமல் கொடுத்து வர, அந்த பிள்ளைகளுக்கு சூடு தணிந்து, நல்ல தேக வளர்ச்சியும், பலமும் ஊக்கமும் உற்சாகமுள்ளவர்களாகத் திகழ்வார்கள் என்பதில் ஐயமில்லை:

## நெல்லி இளகல்

பொதுவாக இதன் ருசி துவர்ப்பாக இருப்பதால்,

# நெல்லியால் ஏற்படும் பயன்

வெளுத்து மஞ்சள் நிறமான காய்களை முதிர்ந்ததாக, எடுத்து தினமும் பச்சையாக இடிக்க வேண்டும். பிறகு மெல்லிய துணியில் வைத்துப் பிழிந்து அரை அவுன்ஸ் சாறு எடுத்து ஒரு தேக்கரண்டி தேன் கலந்து அத்துடன் இரண்டு தேக்கரண்டி எலுமிச்சம் பழரசம் சேர்த்து, மாலை வெறும் தயிரில் சாப்பிட்டு வரவும்.

நீரிழிவு உடம்பில் எத்தனை நாட்களாக, மாதங்களாக, ஆண்டுகளாக இருக்கிறதோ அந்த கால அளவில் கால்பாகம் அளவாவது நாள் தவறாது சாப்பிட்டு வருவது அவசியம். இம்மாதிரி பலருக்குச் செய்து கொண்டதில் சர்க்கரை நோயே உடம்பிலிருந்து விலகி யிருக்கிறது. வெய்யில் காலத்தில் பச்சை நெல்லிக் காய் கிடைக்கும். ஆனால் மற்ற நேரங்களில் என்ன செய்வது என்று நினைக்க வேண்டாம்.

மருந்துக் கடைகளில் விற்கும் நெல்லி வற்றலை தேவையான அளவு வாங்கி வைத்துக்கொண்டு 4 கழஞ்சு வற்றலை ஒரு குவளைத் தண்ணீரில் இரவு அடுப்பில் கொதிக்கவைத்து அரைக் குவளையாக சுண்டவைத்து காலையில் அத்துடன் தேன் 2 தேக்கரண்டி எலுமிச்சம் பழமும் சேர்த்து, குடித்துவர நீரிழிவு என்ற நீர் ரோகம் நாளடைவில் தலை காட்டாமல் உடம்பை விட்டு விலகி விடும். ஆனால் மாமிச உணவு மங்கை, புகையிலை அதிக இனிப்பு வகைகள் ஆகியவைகளை தள்ளி இருப்பது அவசியத்திலும் அவசியம்.

## தீரும் நோய்கள்

அது மட்டுமல்லல! இதே முறைப்படி 20 நாட்கள் செய்ய வெட்டைச் சூடு தணியும்; 40, 80 நாட்கள் குடிக்க நவீன கால வாலிபர்கள் திரைப்படத்தால் தன்னைத்தான் பாழாக்கிக் கொண்ட இளமை புத்துயிர் பெறும். ஸ்கலிதம் நீங்கும். கண் குழி விழுதல், மறதி பயம், பயந்தாங்கொள்ளித் தனம், சந்தேகம், தாது

கக் கலந்த சாற்றில் விட்டுக் காய்ச்சி சாறு சுண்டிய பின்பு மெழுகு பதம் வரும் போது, இறக்கி வடிக்கட்டி வைத்துக் கொண்டு வாரம் இருமுறை தலைமுழுகி வர, பித்தகாசம், கண் காசம், காமாலை, மாலைக் கண், பித்தவெட்டை, உடம்பு எரிவு, கண் எரிச்சல், தலையில் பொடுகு விழுதல், தலைமுடி கொட்டிவிடுதல், போன்ற யாவும் விலகி, தேகம் வலுத்து முடி நன்கு வள்ரும்.

## காய்

நெல்லிக்காயைச் சுவைக்க முதலில் புளிப்பும், துவர்ப்பும் சிறு கைப்பும் கடைசியில் இனிப்பும் காணும் ருசியை உடையது: ஆறு சுவையும் பொருந்திய இந்த காய கற்

தின்பதற்கு இனிப்பாக முதலில் தோன்றுகிறது. நெல்லிக் கனியை உலர்த்தி இடித்து அதனுடன் பல உப சரக்குகளைப் போட்டு நெய்யும் தேனும் கலந்து பாகு பிடித்து இளகலாகச் செய்வார்கள். இந்த முறைப்படி ஆயுர்வேதத்திலும், யூனானி மருத்துவத்திலும் நெல்லிக் கனி இளகல் செய்வதுண்டு. வடமொழியில் இலேகியம் என்றும், உருது மொழியில் ஹல்வா என்றும் கூறுவர்; நெல்லிக்கனியின் அருமை பெருமை தெரிந்த ஆயுர்வேத வைத்தியர்களும், யூனானி மருத்துவர்களும் நெல்லிக்கனியை லேகியத்திலும், ஹல்வாக்களிலும் சேர்த்து பலவித நோய்களைச் சுலபமாகத் தீர்த்துக் கட்டுவார்கள்.

## இந்துக்களின் தெய்வம் நெல்லி மரம்

தமிழகத்தில் சில மதத்தினர் குறிப்பாக தேவங்கச் செட்டியார்கள் ஆண்டு ஒன்றுக்கு ஒரு முறை வன போஜன உற்சவமாக நெல்லி மரத்திற்கு மஞ்சள், குங்குமம் இட்டு ஆபரணங்களையும் அணிவித்து, படையல் செய்து தெய்வமாகக் கருதி வழிபடுகின்றனர். இதன் விளக்கம் யாதெனில், தேவ லோகத்தில் குபேரனின் ஸ்தல விருட்சம் நெல்லி மரம் என்றும் கூறுவர். எனவே குபேரனுக்குப் பிரியமான மரத்தை நாமும் வணங்கி குபேரனின் அந்தஸ்தைப் பெறுவோம் என்று நெல்லிமர வழிபாடு செய்து வருகிறார்கள். மேலும் இவர்கள் இம்மரத்தின் பெயரைக் கூடச் சொல்ல அஞ்சுவார்கள்: நெல்லி மரம் குபேர சம்பத்து கொடுக்கிறதோ? இல்லையோ? இது அவரவர் நம்பிக்கையைப்பொறுத்தது ஆனால் ஆரோக்கியம், பலம், உற்சாகம், நோய் நீங்கப் பெறுகிறது என்பதை நாம் திடமாக நம்பலாமல்லவா?

---

## பாகிஸ்தான் அரசியலில்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ளிப்பான் என்று 1940—ல் இருந்த நிலை இப்போது மாறி விட்டது. இதைத் தலைமை உணர்ந்து செயல்படவேண்டும்."

—என்று அப்பத்திரிக்கை குறுப்பிட்டது செவிடன் ஊதிய சங்காகிவிட்டது!

தேர்தல் வெற்றி வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி யாகிவிட்டது!

மொத்தம் உள்ள 310 இடங்களில் 223 இடங்கள் கூட்டணிக்குக் கிடைத்தன.

பாகிஸ்தான் முசுலிம் லீக்கிற்கு கிடைத்த இடங்கள் பத்தே பத்துதான்!

மத்திய அரசின் ஏஜண்டாக இருந்து வேற்று மொழித் திணிப்பை ஆதரித்துத் தாய்மொழிக்குத் துரோகம் இழைத்து அடக்கு முறை தர்பார் நடத்தி மொழிப் போராட்ட வீரர்களைச் சுட்டுக் கொல்லக் காரணமாக இருந்த கிழக்குப் பகுதி முதலமைச்சர் நூருல் அமீன் பதினெட்டு வயது நிரம்பிய கூட்டணி வேட்பாளரான ஒரு மாணவரிடம் ஏழாயிரம் வாக்கு வித்தியாசத்தில் படு தோல் அடைந்தார்.

தொழில் அமைச்சராக இருந்தவர் கூட்டணி வேட்பாளரிடம் 'டெப்பாசிட்' இழந்தார்;

தாய் மொழிக்கெதிராக வேற்றுமொழி ஆதிக்கத்துக்கு லாலி பாடிய பெருந்தலைகள் அனைவரும் முன்பின் தெரியாத கூட்டணி வேட்பாளர்களிடம் பரிதாபமான முறையில் 'டெப்பாசிட்' இழந்தார்கள்!

அந்நிய மொழி திணிக்கப் பட்டபோது உதட்டை அசைக்காமலிருந்த — அத்தனை மந்திரிகளும் படு தோல்வி அடைந்தார்கள்!

ஆம்; தோசை திருப்புவது போல் மக்கள் ஆட்சியைத் திருப்பிப் போட்டார்கள்!

மத்திய அரசிற்கு லாலி பாடிக் கொண்டு; அந்நிய மொழி ஆதிக்கத்திற்கு நடை பாவாடை விரித்துக் கதவையும் திறந்துவிட்டவர்கள் காதறுந்த ஊசியானார்கள்!

மொழி உணர்வை மதிக்கத் தவறுகிற மமதையாளர்களுக்கு உலகெங்கிலும் மக்கள் தீர்ப்பு ஒரே மாதிரியாகத்தான் இருக்கும்போலும்!

(நன்றி: முரசொலி.)

---

## அட்டைக்கடியும்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த—நோயினால் பெற்ற தாயையும், தந்தையையும், அண்ணன் தம்பியையும் உற்றார் உறவினர்களையும் இழந்து அநாதைகளானார்கள்.

"கூனி அடிச்ச மலை
கோப்பிக் கன்னு
அடிச்ச மலை
அண்ணனைத் தோத்த மலை
அந்தா தெரியுதடி
(ஐயோ தெரியுதடி)"

காட்டு ஜுரத்தாலும், மலேரியா காய்ச்சலாலும் மாத்திரமல்ல, தகிக்கும் வெயிலிலே வாழ்ந்தவர்களுக்கு விடாத அடைமழையும். வெடவெடக்க வைத்த பனியும் ஒத்துக்கொள்ளவில்லை; குளிர் தாங்காமலும் பலர் மாண்டு போனார்கள்.

நோய்க்கும் நொடிக்கும் ஆளாகி, உயிர்த்தப்பிப் பிழைத்தவர்கள் தொடர்ந்து பயணத்தை தொடர்ந்தனர். போகும் பாதை நீண்டது. ஏற்றம், இறக்கம், நீண்ட தூரம்; கால்நடையாக நடந்து, அடிகள் வீங்க உடல் சோர என்றும் யாத்திராத, ஏறி இறங்கியிராத ஏற்ற, இறக்கங்களைக் கடந்து தோட்டங்களை அடைந்தார்கள்.

"ஏத்தமடி பெத்துராசி
எறக்கமடி கொட்டியாகலை
தூரமடி தொப்பித்
தோட்டம்
தொடர்ந்துவாடி
நடந்துபோவோம்

"ஏத்தமடி நாரளை
எறக்கமடி ரதாலை
தூரமில்லை நானுஓயா
தொடர்ந்து வாடி
நடந்துபோவோம்"

எப்படியோ கூட்டமாக கூடிப்பேசி தோட்டங்களை அடைந்தார்கள்.

---


## தீக்குள்...

(9ம் பக்கத் தொடர்ச்சி)

"குட் மோனிங்! மிஸ்டர் ரகுராமன் வீடுதானே?" என்றார் இன்ஸ்பெக்டர்.

"ஜேஸ். ஆனால் அவர் இல்லையே" என்றாள் பாரதி.

"இல்லையா? ரகுராமனைத் தேடிக் கொண்டுதானே வந்தேன்" என்று இன்ஸ்பெக்டர் கூறியபோது, பானுமதியும் பாரதியும் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தனர். அவர்கள் இருவர் உள்ளங்களையும் பயம் கவ்விக் கொண்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கநாட்டு டிஸ்னிபோல் ஈழத் தமிழகத்தில் இதோ நம் ரீ. ரீ. ஆர்!


## 'தியாகத் தலைவன்' உருவாகும் வரலாறு!

அமெரிக்க நாட்டு விந்தை மனிதர் டிஸ்னி, கேலிச் சித்திரங்களை பயன் படுத்தியே திரைப்படங் களைத்தயாரித்து வந்தது தெரிந்ததே... இதோ நம் ஈழத்தமிழகத்திலும் ஒரு டிஸ்னி உருவாகி வருகிறார்...!

ஆமாம், டிஸ்னியின் பாணியில், அவரைப் பின்பற்றி ஈழத் தமிழகத்தின் எழுச்சி மிகு வழி காட்டி கோப்பாய்க் கோமான் அமரர் வன்னியசிங்கம் அவர்களது அரசியல் வாழ்வை 'தியாகத் தலைவன்' என்ற பெயரில் திரைப்படமாகத் தயாரித்து வருகிறார் அச்சுவேலியைச் சேர்ந்த கலைஞர் ரீ. ரீ. ஆர்!

'தியாகத்தலைவன்' திரைப் படத்திற்கான ஆரம்பவிழா அண்மையில் நடைபெற்றது.

கலைஞர் ரீ. ரீ. ஆர். அவர்கள்! 1966ம் ஆண்டு தாம் கல்விபயின்ற பாடசாலை (புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி) அதிபர் திருவுருவத்தை வரைந்து அவரின் பிரிவுபசார வைபவத்தின் போது திரை நீக்கம் செய்ததுடன் தேசிய அரசாங்க காலத்தில் பிரதமராக இருந்த திரு. டட்லி சேன



நாயக்காவின் உருவத்தையும் வரைந்து அன்பளிப்பு செய்திருக்கிறார்.

திரு. ரீ. ரீ. ஆர். அவர்கள் திரைப்பட ஓவியம் கற்க தென்னகம் சென்று பழைய மாம்பலத்திலுள்ள சங்கர் சித்திரசாலையில் (ஜோதி காட்டூன் பாடசாலை) காட்டூன் ஓவியம் கற்றதுடன், இயக்குனர் கே. பாலசந்தர் கைவண்ணத்தில் உருவாகிய 'எதிர்நீச்சல்' படத்திற்கு பாடசாலை அதிபரும் தினந்தந்தி காட்டூனிஸ்டும் ஆகிய ஆர். மாதவராவுடன் காட்டூன் திரைப்பட வேலைசெய்து ஈழம் திரும்பி இப்பொழுது கோப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் சி. கதிரவேற்பிள்ளை, ஆவரங்கால் தமிழரசுக்கட்சி கிளை தலைவர் திரு. க. சின்னத்துரை ஆகியோரின் உதவியுடனும் இந்த திரைப்படத்தை தயாரிக்க முன்வந்துள்ளனர்:

தயாரிப்பாளர்கள்: ரீ. ரீ. ஆர். சகோதரர்கள் அச்சுவேலி.

திரைக் கதை வசனம்: சி. பாலசிங்கம் புங்குடுதீவு;

கமரா: சங்கர் ஸ்ரூடியோ சென்னை.

பொதுசன தொடர்பு: க. தணிகாசலம் கிளிநொச்சி;

பாடல்: சி. பாலசிங்கம் புங்குடுதீவு இ. ராஜா அச்சுவேலி;

பாடல் இயக்குனர்: சி. துரைராசா கெருடாவில்;

கருத்துப் படப்பிடிப்பாளர்கள்: ஞானம் ஸ்ரூடியோ யாழ்ப்பாணம், தயாஸ்ரூடியோ அச்சுவேலி;

பிரதம ஆலோசகர்கள்: எஸ். ஜே. வி. செல்வநாயகம், கா. பொ. இரத்தினம், வட்டுக்கோட்டை அமிர்தலிங்கம், ஆலாலசுந்தரம், க. சின்னத்துரை, வை. நடேசலிங்கம், சி. கதிரவேற்பிள்ளை, மு. கனகரத்தினம்;

இயக்குனர்: ரீ. ரீ. ஆர். அச்சுவேலி.

# முத்தையன் எனும் தமிழ்த் தொண்டன்!



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாபெரும் தொண்டர்களில் ஒருவரும் சித்தன்கேணி வாசியுமான திரு. சி. மு. முத்தையன் அவர்கள் 17-5-70ம் ஆண்டு சிவபதம் அடைந்தார். அவரது முதலாவது சிரார்த்த தினம் 4-6-71ல் நடைபெற்றது.

''தோன்றிற் புகழொடு தோன்றுக'' என்ற வள்ளுவரின் குறளுக்கமைய 13-8-1889ம் ஆண்டு சித்தன் கேணியைச் சேர்ந்த உறுதாவளையில் பிரபல கல்விமான்கள் குடும்பத்தில் தோன்றினார்.

மலேசிய புகையிரத நிலைய அதிபராகக் கடமையாற்றிய இவர், சிறம்பான் — கோலாலம்பூர் விவேகானந்த சபைகளில் கௌரவ சமய வான சாஸ்திர — சோதிட பிரசாரகராய் இருந்து பல இளைஞர்களுக்கு அறிவூட்டியவர். இதையிட்டு இந்தியா, மலேசியா, ஈழநாட்டுக் கல்விமான்களால் பெரிதும் போற்றப்பட்டவர்.

இவர் வடஇந்தியாவிலும் இலங்கையிலும் பிரபலபட்டு வியாபாரியாக இருந்தவர். இந்தியாவில் வசிக்கும் காலத்தில் அண்ணல் காந்தியடிகளின் பல சுதந்திர இயக்கங்களில் தீவிர பங்கு கொண்டு உழைத்து, டாக்டர் அன்சாரி போன்றோர்களால் பெரிதும் பாராட்டப்பட்டவர்.

பாரதத்து வீமனைப்போல் தோற்றமும், துணிபும் கொண்ட இவர் காந்தீயத்திலும் சாத்வீகத்திலும் நம்பிக்கை கொண்டவர். காந்தித் தொப்பி—கதர் வேட்டியுடன் நெற்றியில் துலங்கும் சந்தன குங்குமப் பொட்டுடனேயே சதா காட்சியளிப்பார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பெற்ற தேர்ச்சியையும் அனுபவத்தையும் கொண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சிப் போராட்டங்களிலும் பங்குபற்றி தொண்டர்களை வழி நடத்தினார். கட்சியின் சகல போராட்டங்களிலும் கலந்துகொண்டு முன்னின்று உழைத்தவர்.

பாதயாத்திரை—சைக்கிள் பவனி — முதலியவற்றிக்கு தலைமைதாங்கி திறம்பட செயலாற்றினார். சத்தியாக்கிரகம் தொகுதிவாரியாக நடந்தபோது வட்டுக்கோட்டைத் தொகுதி தொண்டர்களுக்குத் தலைவராக இருந்து செயல் புரிந்தார். கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டங்களின் போது பொலிசாரின் அடி உதைகளுக்கு அஞ்சாது தீரமாக நின்று செயல்படும் பெற்றியர்.

தந்தை செல்வாவினதும் மற்றும் தலைவர்களினதும் பாராட்டுகளைப் பல முறைகள் பெறும் பேறு பெற்றவர்.

வட்டுக்கோட்டைத் தொகுதியில் தேர்தல் காலங்களிலும், மற்றும் வேளைகளிலும் இவர் கட்சியின் பெயரால் செய்யும் சேவைகள் அளப்பரியவை! தளபதி அமிர்தலிங்கம் அவர்களால் 'நடமாடும் கட்சிக் காரியாலயம்' என வர்ணிக்கப்பட்டவர்.

தம் சொந்தச் செலவில் துண்டுப் பிரசுரங்கள்—நூல்கள் முதலியன பிரசுரித்து பல பேர் மனதில் சுதந்திர வேட்கையை உண்டாக்கினார். சிறீ எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கு கொண்டதால் சிறை சென்ற பெருமையும் இவருக்குண்டு.

1957, 58ம் ஆண்டுகளில் மட்டக்களப்பில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கோப்பாய்க் கோமான் வன்னிய சிங்கம் அவர்களுடன் இணைந்து புடவைகள் உணவு வகை சேர்த்துக் கொடுத்து உதவி புரிந்தார்.

இவர், தமிழ், ஆங்கில பாஷைகளில் ஆழ்ந்த அறிவுள்ளவர். சைவ சித்தாந்தத்தை விஞ்ஞான முறைப்படி உலகுக்கு, நூல் மூலமாக ஆங்கிலத்தில் விவரித்துக் காட்டினார். இவரது நூல்கள் லண்டன் மியூஸியத்திலும் இடம் பெற்றிருக்கிறது. தமிழ்நாடு 'இந்து' பத்திரிகை இவரது படைப்புகளை அழகான முறையில் விமர்சனம்செய்து கௌரவித்தது.

இவரால் எழுதப் பெற்ற சில நூல்கள்:— திராவிட சித்தாந்தம், வான சாஸ்திரம், அன்பு மலர், வயந்தன் கம்பாட்டுப் பாடல், Saiva Sithantha in Relation to Science, சைவ சித்தாந்தம், (அச்சில்) சைவ வேதாந்தம் (அச்சில்)

இப் பெரியாரின் இழப்பு கட்சிக்கும் சமயத்திற்கும் நிரப்ப முடியாத பேரிழப்பாகும் இவரது முதல் சிரார்த்த தினத்தில் உற்றார் உறவினருடன்—இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைக் கிளையும் சேர்ந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தனையில் ஈடுபட்டது.

## எல்லா உலகும்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

படைத்த அந்த உணவை அன்பாகவும் அமிர்தமாகவும் ஒளவையார் உண்டார். உண்டபின் கை அலம்பி, பாயில் அமர்ந்து அருமையான வெண்பாவைப் பாடினார்கள்—பாட்டைக் கேட்ட பின்னர் அவரை ஒளவையார் என உணர்ந்து மேலும் பய பக்தியுடன் உபசரித்தார்கள்!

அந்த வெண்பாவை இதோ பாருங்கள்.

வரகரிசிச் சோறும்
வழுதுணங்காய் வாட்டும்
முரமுரன வேபுளித்த
மோரும்—திரமுடனே
புல்வேளூர்ப் பூதன்
புகழ்ந்துபரிந் திட்டசோ
றெல்லா உலகும் பெறும்

ஒளவையார், இப்படி அன்புடன் அளித்த அந்த சிறுமையான உணவைப் பெருமையாக மதித்துப் பாடினார்கள்—அந்த உணவு எல்லா உலகும்பெறும் என்றும் கூறினார்கள். ஆனால் உண்மையில் இந்த பாடல் எல்லா உலகும் பெறும்.

## பொதுவாழ்வு

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வேதனைகளைத் துச்சமென மதித்து, தூக்குமேடையும் துப்பாக்கியும்' சீறிய போதும் சிந்தை கலங்காது, மக்களின் வாழ்க்கையுயர்வுக்காகப் போராடுபவரே, உண்மைத்தியாகி. அவனே, மக்களின் இதயத்தில் மங்காத நிலவாவான்!

பொதுப் பணி, கஷ்டமானதுதான். ஆனால் அத்துன்பங்களைத் தாங்குவதிலும் இன்பம் உண்டு— கடலுக்குள் சென்று முத்தையெடுத்தபோது எழும்புவதுபோல.

பொது வாழ்வுக்காகத் தம்மை அர்ப்பணித்த, மாவீரர்கள் மறைந்து போய் விட்டார்கள். ஆனால் அவர்களது பெயர்கள்—உலகின் நாவிலே, இன்றும் நர்த்தனமாடுகிறது.

மனிதன் பிறக்கிறான்—வாழ்கிறான்—சாகிறான்!

அவன் சாவோடு, அவனுருவமும், அவனைப் பற்றிய நினைவும் அஸ்தமித்துவிடுகிறது.

ஆனால் மக்கள் வாழ்வுக்காக வீரச்சாவு பெற்றவன் பெயரோ என்றும் அழிவதில்லை.

## கடைசி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நி. சபைதமிழினத்தின் குறைந்த பட்சக் கோரிக்கைகளைப் புறக்கணிக்குமானால் அதிலிருந்து தமிழரசுப் பிரதிநிதிகள் வெளியேறுவதைத் தவிர வேறு வழி இல்லையென்றும் எச்சரித்தார்.

(அவரது முழுப்பேச்சு அடுத்த வாரம்.)

உண்மைப் பொதுப்பணியாளனுக்குக் கிடைக்கும் உயர்ந்த பரிசு இதுதான்!

நல்லதுக்குப் போராடி, அந்நன்மை கிடைத்தும், அதை தன் சுயநலத்துக்குப் பயன்படுத்தினால், பேரும் புகழும் மறைவது மட்டுமல்ல—மக்களின் கண்டனத்துக்கும் 'துரோகி' என்கிற பழிச்சொல்லுக்கும் ஆளாவார்கள்.

பொது வாழ்வு இன்பந்தேங்கும் சுனையல்ல! ஆனால், தன் பெயரை, உலகு நிற்கும் மட்டும், பொறித்துக் காட்டும், பொன் ஏடு!

# மொழி ஆதிக்கம்....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பாகிஸ்தான் இரண்டுபடவும் 'வங்காள தேசம்' உருவாவதற்கும் மூல காரணமாக இருந்தது உருது மட்டுமே ஆட்சிமொழியென்ற பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையின் முட்டாள்தனமான தீர்மானமே என்பதனை நமது அரசியல்நிர்ணய சபையும் இந்நேரத்தில் சிந்தனைக்கு எடுத்துக்கொண்டிட வேண்டும்!

வங்காள தேசத்தைப் பற்றி சிந்தித்திடும் போது, வங்காள தேசத்தின் 'தேசிய கீதமாக' இருந்திடும் கவி ரவீந்திரநாத் தாகூரின் கவிதையொன்று என் நினைவுக்கு வந்திடுகிறது. அந்தக் கவிதையிலிருந்து ஓர் பகுதியை 'குமுதம்' இதழ் அண்மையில் வெளியிட்டிருந்தது. அக்கவிதையைக் கீழே தருகிறேன். அக்கவிதையில் 'வங்கத்தாய்' என்று இருந்திடும் இடங்களிலெல்லாம் 'ஈழத்தாய்' என்று நினைத்துக்கொண்டு கவிதையைப் படித்திடும்போது இதயம் உணர்ச்சியில்சிலிர்த்திடுகிறதன்றோ!

வங்கத்தாயே!
உன் பொன்னிறம் மாறிவிட்டால்
என் கண்ணிலே நீர் சுரக்கும்!
உன் வீட்டுக் கூடத்தில்தான்
நான் குழந்தையாக வளர்ந்தேன்!
உனது மண் என்னுடலைத் தொட்டால்
புனிதமாகிறது என் வாழ்வு.
சந்தியில் நீ ஏற்றும் விளக்கின் எழிலை
சிந்தையில் நான் பார்த்து உனை அணைத்துத்
தழுவத்தான் ஓடோடி வருவேன்!
அழகான நெல் வயல்களிலும்
படகுத்துறையிலும் கன்றுகள் மேயும்
அடர்ந்த புல்வெளிகளிலும்
என் நாட்களைக் கழிக்கின்றேன்;
[illegible]
வங்கத்தாயே!
உன்மாட்டுக் காரர்களும் உழவர்களும்
என் அண்ணன் தம்பிகளே!
வங்கத்தாயே!
என் தலையை உன் காலடியில் வைக்கின்றேன்!
உன் கால் தூசிதான்
என் மகுடத்தின் இரத்தினக் கற்கள்!
வங்கத்தாயே...!
பெற்ற அனைத்தையும்
உன் காலடியில் வைக்கின்றேன்!
மற்றவர்களின் பகட்டை நாடிச் சென்று
என் கழுத்தில் கயிற்றை
மாட்டிக்கொள்ளமாட்டேன்;
வங்கத்தாயே, இது உறுதி!

உன் நண்பன்.

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது


78வது வெற்றி நாள்
செல்லமகால்
மாஸ்டர் பிரபாகர் நடித்த
# வா ராஜா வா

இப்பொழுது காட்சியளிக்கிறது
எல்பின்ஸ்டன்
எம். ஜி. ஆர். நடித்த
# குலேபகாவலி

இப்பொழுது காட்சியளிக்கிறது
சிவாஜிகணேசன் நடித்த
வின்சர் (யாழ் நகர்)
# குருதட்சணை

இப்பொழுது காட்சியளிக்கிறது
ரொக்ஸி
எம். ஜி. ஆர். நடித்த
# புதிய பூமி

விரைவில் எதிர்பாருங்கள்



கெப்பிட்டல்
பிளாஸா
ரவிச்சந்திரன்
ஜெயலலிதா
அசோகன் முத்துராமன்
நாகேஷ் ஷீலா
நடித்த
ராமண்ணாவின்
டைரக்ஷன்:—ராமண்ணா
# மூன்றெழுத்து

கெப்பிட்டல் பிளாஸா
எம். ஜி. ஆர். சரோஜாதேவி
ரத்னா—நம்பியார்
—நடித்த—
# எங்க வீட்டுபிள்ளை
புதிய கொப்பி (கலர்)

கிங்ஸ்லி
சிவாஜி சரோஜாதேவி
எம்.ஆர்.ராதா பாலையா
—நடித்த
# பாலும் பழமும்
(புதிய கொப்பி)

4வது ஜனத்திரள் நிறைந்த மாதமாக காட்சிதருகின்றான்

செட்ன்ரல்
(மருதானை)
ராணி
(யாழ்நகர்)
—ஆகிய திரைகளில்—
நடிகர்திலகம்
* சிவாஜிகணேசன்
* கே. ஆர். விஜயா
* முத்துராமன்
சிவாஜிகணேசன்
அளிக்கும்
அருண்பிரசாத் மூவீஸ்



சதன்
நம்பியார்
எஸ்; என். லட்சுமி
விஜயசந்திரிகா
பேபிராணி
மற்றும் பலர் நடித்த

# ராமன் எத்தனை ராமனடி

கதை—வசனம்: பாலமுருகன்
இசை மெல்லிசை மன்னர்: எம். எஸ். விஸ்வநாதன்
டைரக்ஷன்—தயாரிப்பு: பி. மாதவன் (பி. ஏ.)
(பாஸ்கர் பாவும் ரத்து)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் [illegible] கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1971-ம் வருடம் ஆனி மாதம் 15-ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது —ஆசிரியர் கோவைமகேசன்